பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 26 வியாழக்கிழமை 09.02.2023 கதிர் 93

### இனி இது ரகசியம் அல்ல!

இந்திய – இலங்கை ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இருப்பினும் அந்த ஒப்பந்தத்தில், அதனோடு தொடர்புபட்ட ஒரு தரப்பான தமிழர்களுக்கு எந்த வகிபாகமும் கிடையாது. ☞2

# தனி விமானத்தில் பலாலி ஊடாக யாழ். வருகிறது இந்திய அரச குழு

## அமைச்சர் எல்.முருகன், அண்ணாமலை வருகை கலாசார நிலையத்தை சனியன்று திறந்து வைப்பர்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.09

இந்திய மீன்பிடித்துறை அமைச்சர் எல்.முருகன் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட ☞2





# அரசின் புதிய வரியை எதிர்த்து கொழும்பில் பெரும் போராட்டம்

## நேற்று கோஷங்களால் அதிர்ந்தது நகரம் வீதிகளில் பொலிஸ், இராணுவம் குவிப்பு

**அரசின் புதிய தனிநபர் வருமான வரியை எதிர்த்து நேற்று 80க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நாடு முழுவதும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டன. தலைநகர் கொழும்பில் பெரும் போராட்டங்கள் நடந்தன. பல்லாயிரக்கணக்கானவர்கள் இவற்றில் கலந்துகொண்டனர். போராட்டங்களைக் கட்டுப்படுத்த பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். ஒரு கட்டத்தில் இராணுவமும் துணைக்கு அழைக்கப்பட்டது.** ☞2

## நெருக்கடி நிலைமைக்கு ஆட்சி மாற்றமே ஒரே வழி

### நளின் பண்டார எம்.பி. சுட்டிக்காட்டு



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஆட்சி மாற்றமே ஒரே வழி என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ☞9

## பிரான்ஸ் தூதுவர் - கூட்டமைப்பு பேச்சு; அரசியல் தீர்வு குறித்து அதிக கரிசனை



இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ☞9

## விடுவிக்கப்பட்ட வீடுகளிலிருந்து இரவிரவாகப் பொருட்கள் மாயம்

### எடுத்துச் செல்லும் குழு தம்மை இராணுவம் என்கிறது

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.09

வலி.வடக்கில் கடந்த வாரம் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நல்ல நிலையில் உள்ள ஒரு சில வீடுகளில் காணப்படும் பெறுமதி வாய்ந்த உபகரணங்களையும் இரவு நேரங்களில் சிவில் உடையில் வரும், தம்மை இராணுவத்தினர் என அடையாளப்படுத்தும் ☞9

# 13ஐ நடைமுறைப்படுத்துவது குறித்து ஜனாதிபதி மறைமுகமாக தெரிவிப்பு

### கொள்கை விளக்க உரையில் அவர் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றுய தனது கொள்கை விளக்க உரையில் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

13ஐ தான் முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்று ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்திருந்தார். அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சரும் அதனை வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் உரையில் அது குறித்து தெளிவான அறிவிப்பு இடம்பெறும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படிப்பட்ட வெளிப்படையான அறிவிப்பு எதுவும் ☞9

# சமூகத்தைச் சீரழிப்பவர்கள் நாடாளுமன்றத்தில் உண்டு

### ராஜித எம்.பி. சீற்றம்



வட்டிக்காரன் – சாராய கடைக்காரன் – விபசார விடுதி நடத்துகின்றவர்கள் எல்லோரும் நாடாளுமன்றம் வந்தால் நாட்டின் நிலைமை என்ன? அவர்கள் செய்வது ☞9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருதரப்பாக அவர்கள் அந்த ஒப்பந்தத்திற்குள் உள்வாங்கப்படவேயில்லை. அதாவது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் தமிழர்களுக்கு இடமில்லை.

அதுபோன்றதொரு நிலைதான் யாழ்ப்பாணக் கலாசார நிலையத்தில் யாழ். மாநகர சபைக்கும்.

சபையின் நிலத்தில் சபைக்காகத்தான் அந்த நிலையம் இந்திய மக்கள் பணத்தில் புதுடில்லி அரசால் கட்டப்பட்டது. அவ்வளவு பெரிய கட்டடத்தை நிர்வகிக்கக்கூடிய நிதிவளம் மாநகர சபையிடம் இல்லை என்பதால் கட்டடத்தை கையளிப்பது தாமதமாகியது. நாளை மறுதினம் சனிக்கிழமை அந்தக் கட்டடம் கையளிக்கப்படப்போகின்றது.

இந்தக் கட்டடம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவின் அடிப்படையில் கட்டப்பட்டது என்பதால் அது முறைப்படி இலங்கை அரசிடம் கையளிக்கப்பட வேண்டும். அதற்கான நிகழ்ச்சியே சனிக்கிழமை அந்த நிலையத்தில் நடக்கப்போகின்றது. அந்த மேடையில் வைத்தே கட்டடத்தை இலங்கை அரச பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கையளிப்பார்கள் என்பதற்கான இணக்கப்பாடுகள், ஏற்பாடுகள் முன்னர் இருந்தன. ஆனால், இப்போது இந்த விடயத்தில் யாழ். மாநகர சபை வேண்டாப் பெண்டாட்டி ஆகிவிட்டது.

கையளிப்பு நிகழ்வு தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் யாழ். மாநகர சபைக்கு எந்தவொரு வகிபாகமும் கிடையாது. அனைத்தும் கொழும்பு அமைச்சினாலும் கொழும்பின் முகவரான ஆளுநர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தாலும் மட்டுமே திட்டமிடப்படுகின்றன, செயற்படுத்தப்படுகின்றன. அதுவும் யாழ். மாநகர சபையைத் திட்டமிட்டு ஒதுக்கிவிட்டு.

நிகழ்வுக்கான அழைப்பிதழில் ஜனாதிபதி, பிரதமர், துறைசார்ந்த அமைச்சர், யாழ்ப்பாணத்து அமைச்சர், இந்தியத் தூதுவர் ஆகிய அனைவரது பெயர்களும் விருந்தினர்கள் வரிசையில் இடம்பெற்றிருந்தாலும் மாநகர சபையின் முதல்வரின் பெயர் அதில் பொறிக்கப்படவேயில்லை. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவைத் தொடர்பு கொண்ட மாநகர முதல்வர் ஆனல்ட் இந்த விடயத்தை அவரது கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

எங்கள் நிலத்தில், எங்களுக்காக அமைக்கப்பட்டு, இதுவரைக்கும் நாங்களே மின்சாரக் கட்டணம் செலுத்தி வரும் ஒரு கட்டடத்தின் திறப்பு விழா எமக்குத் தெரியாமலேயே திட்டமிடப்படுகின்றது, எம்மோடு கலந்தாலோசனை நடத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல அது குறித்து எமக்குத் தெரியப்படுத்தப்படகூட இல்லை என்று தனது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தார்.

இந்த விடயத்தில் அமைச்சின் தலையீடு ஏதுமில்லை. எல்லாம் வடக்கில் உள்ளவர்களாலேயே திட்டமிடப்படுகின்றது என்று சொல்லி நழுவப் பார்த்தார் அமைச்சர். நேற்றுமுன்தினமே இந்த விடயம் அவரது கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் எதுவும் நடக்கவில்லை.

ஆனால் ஆனல்ட் விடாப்பிடியாக நின்றார். மாநகர சபைக்குத் தெரிவிக்கப்படாமல், காட்டப்படாமல் அழைப்பிதழ்கூட தயாரிக்கப்பட்டுவிட்டது. அதில் மாநாகர சபைக்கு எந்தவொரு இடமும் இல்லை, இதுதான் நிலை என்றால், அது பற்றி மக்களுக்குப் பகிரங்கமாக அறிவித்துவிட்டு நிகழ்வைப் புறக்கணிக்கவேண்டிவரும் என்கிற நிலையில் நேற்று அமைச்சரை எச்சரித்தார்.

இந்தியாவோடு தொடர்புடைய விவகாரத்தில் எதற்கு வேண்டாத சிக்கல்கள் என்று நினைத்தாரோ என்னவோ, அமைச்சரின் தலையீட்டை அடுத்து மாநகர முதல்வர் ஆனல்ட்டின் பெயரையும் விருந்தினர்கள் வரிசையில் சேர்த்து புதிய அழைப்பிதழ் நேற்று மாலையே தயாரிக்கப்பட்டது.

நான் நேற்றே சொன்னமாதிரி சொப்பன சுந்தரியை யார் வைத்துக் கொள்வது என்ற சிக்கலில் இப்போது 11ஆம் திகதி கட்டடம் மாநகர சபையிடம் கொழும்பால் கையளிக்கப்படாது. அடுத்து வரும் 5 வருடங்களுக்கு யாழ். மாநகர சபை – இந்தியத் தூதரகம் – கொழும்பு கலாசார அமைச்சு ஆகியன இணைந்த முகாமைத்துவத்தை முன்னெடுப்பது என்று இணக்கம் காணப்பட்டபோதும் மாநகர சபையை எப்படியாவது கழற்றிவிட்டுவிட்டு சுந்தரியைத் தாமே முழுமையாக வைத்துக் கொள்ள கொழும்பு முற்படுகின்றது.

இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் இந்திய மத்திய அமைச்சர் எல்.முருகன் தலைமையிலான குழுவினருடன் இது தொடர்பில் பேசி, கட்டடத்தை அன்றைய தினமே மாநகர சபையிடம் கையளிப்பதற்கு எமது அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். இல்லையேல் மீண்டும் ஒருபோதும் அது மாநகர சபையின் கைகளுக்கு வராமலேயே போய்விடக்கூடும்.

***

வழக்கமாக ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் தேநீர் விருந்தொன்று ஜனாதிபதியால் வழங்கப்படும். 9 ஆவது நாடாளுமன்றத்தின் நான்காவது அமர்வை நேற்று தொடக்கி வைத்து உரையாற்றிய ரணிலும் அதேபோன்று தேநீர் விருந்து வழங்கினார். இத்தகைய விருந்துகளில் தமிழ்த் தலைவர்கள் ஜனாதிபதியுடன் நட்புறவோடு சிரித்துப் பேசும் ஒளிப்படங்கள் வெளியாகி பரபரப்பாகுவது வழமை.

இந்தத் தேநீர் விருந்தின்போது ஜனாதிபதி எல்லாத் தரப்பினருடனும் அளவளாவுவார் அல்லது அவர்கள் சென்று ஜனாதிபதியுடன் அளவளாவுர். இது ஒரு சம்பிரதாயம். இதனை இரா. சம்பந்தனோ, எம்.ஏ.சுமந்திரனோ செய்தால் அந்தப்படம் அடுத்த நாளே பெரியளவில் பேசப்பட்டு சமூக ஊடங்களில் பேசுபொருளாகும். எதிர்க் கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுக்கும் உள்ளாகும்.



நேற்று ரணில் கொடுத்த விருந்திலும் அத்தகைய ஒரு படம் சிக்கியது. ஆனால் அதில் இருந்த தலைவர்களில் சம்பந்தனோ சுமந்திரனோ இல்லை. இதுதான் அந்தப் படம் பாருங்கள். என்ன இருந்தாலும் ரணிலுக்கு முன்பாக புளொட் தலைவர் சித்தார்த்தனின் அந்தப் பௌவியம் எனக்குப் பிடித்திருக்கிறது. வாசகர்களே உங்களுக்கு....!

- இடிமின்னல் -

## தனி விமானத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் தனி விமானம் மூலம் இன்று பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இந்தியாவால் யாழ். நகரில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தினை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றனர். நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்விற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும யாழ்ப்பாணம் வருகின்றார். பிரதமர் தினேஸ் குணவர்த்தன, அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, விதுர விக்கி ரமநாயக்க, இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஆகியோரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று வருகை தரும் இந்திய அமைச்சர் எல.முருகன் தலைமையிலான குழுவினர் 12ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கி நிற்கவுள்ளனர். நண்பகல் 12.30ற்கு தனி விமானத்தில் பலாலியை வந்தடையும் இக்குழுவினரை வரவேற்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் யாழ்ப்பாணம் வருகிறார்.

## அரசின் புதிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

முறையற்ற வரி விதிப்பினூடாக அரசு பொதுமக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளமைக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

சுகாதாரம், மின்சாரம், துறைமுகம், பெற்றோலியம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், வங்கிகளின் அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 80 இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.

இதற்கு இணையாக அரச, தனியார் துறை வைத்தியர்கள் 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தது என்று தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒரு பிரிவான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இதனிடையே, அரச நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றிணைந்த எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக கொழும்பு லோட்டஸ் வீதியில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகவும் வாகனப் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது.

புதிய வரிக்கொள்கைக்கு எதிராக இலங்கை மின்சார சபை ஊழியர்கள், கொழும்பு கோட்டை மின்சார சபை தலைமையகத்திற்கு முன்பாகக் கோஷங்களை எழுப்பி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

கொழும்பு – ஹைட்பார்க்கில் பிரதான எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கு கூடியிருந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்தப் பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் அங்கு சில மணி நேரம் பெரும் பதற்றம் நிலவியது.

நியாயமற்ற வரிக்கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் கொழும்பு கோட்டையின் பல்வேறு வீதிகளில் முன்னெடுக்கப்படுவதற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோட்டை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் நீதிமன்றம் நிராகரித்தது.

அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு அமைவாக அமைதியான போராட்டங்கள் மற்றும் பேரணியை முன்னெடுக்க முடியும் என்று கோட்டை நீதிவான் திலின கமகே சுட்டிக்காட்டினார்.

அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் யாராவது செயற்படும் பட்சத்தில், பொலிஸாருக்கு உள்ள அதிகாரங்களுக்கு அமைய செயற்படுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கொழும்பின் பல்வேறு வீதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கறுவாத்தோட்டைப் பொலிஸார் விடுத்த கோரிக்கையையும் நீதிமன்றம் நிராகரித்தது.

பௌத்தாலோக மாவத்தை, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, தேர்ஸ்டன் வீதி, ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தை உள்ளிட்ட வீதிகளுக்குள் பிரவேசிப்பதைத்

(09ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

# மலையக தமிழர் பொருளாதார மேம்பாட்டுக்கு அமெரிக்காவின் பங்களிப்பு மிக மிக அவசியம்!

## அமெரிக்க தூதரிடம் அமைச்சர் ஜீவன் கோரிக்கை விடுப்பு

மலையகத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு அமெரிக்காவின் பங்களிப்பும் அவசியம். அதற்காக உரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன்பேச்சு நடத்தினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்த ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் தற்போதைய நிலைவரம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன், மலையக மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் மற்றும் அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.



## பாரிஸ் கிளப் உறுதிமொழியை வரவேற்றுள்ளது அமெரிக்கா!



இலங்கைக்கான கடன் உத்தரவாம் தொடர்பாக இந்தியா வழங்கிய உறுதிமொழியை அடுத்து பாரிஸ் கிளப் உறுப்பினர்கள் அளித்த உறுதிமொழியை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

பாரிஸ் கிளப்பின் இந்த அறிவிப்பை கண்டு மகிழ்ச்சி அடைவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார். ஹங்கேரி மற்றும் சவூதி அரேபியாவுடன் இணைந்து சீனா உட்பட மீதமுள்ள நாடுகளின் வகிபாகத்துக்கு பாரிஸ் கிளப் விடுத்த அழைப்பிற்கு அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதிய ஊழியர் களுக்கும் இடையில் ஊழியர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 290 கோடி டொலர் கடனை பெற்றுக்கொள்வதற்கு இலங்கைக்கு இந்த உத்தரவாதங்கள் முக்கியமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

## துருக்கி நாட்டு ஜனாதிபதியோடு ரணில் தொலைபேசியில் பேச்சு!

துருக்கி ஜனாதிபதி ரசெப் தயிப் எர்டோகனுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி வாயிலாக உரையாடினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாரிய அழிவைச் சந்தித்துள்ள துருக்கி மக்களுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க இலங்கை மக்கள் தயாராக உள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பின்னர் காணாமல் போயுள்ள இலங்கை பெண்ணை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.



69 வயதான குறித்த பெண் தொடர்பில் இதுவரை எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை என அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## கல்வியங்காடு சந்தை வியாபாரிகள் 13 பேருக்கெதிராக சட்டநடவடிக்கை!





கல்வியங்காடு மீன் சந்தையில் அங்கீகரிக்கப்படாத, நிறுக்கும் கருவி (தராசை) பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் கல்வியங்காடு மீன் சந்தையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளைப் பரிசோதித்த போது, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத, வியாபாரத்துக்கு பயன்படுத்தமுடியாத 13 நிறுக்கும் கருவிகளை வியாபாரிகள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## சகோதரனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலைசெய்த 14 வயது சிறுவன் கைது!

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது மூத்த சகோதரனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த அவரது 14 வயதுடைய சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை தெற்கு, தேகாவத்தை பலதொட்ட பிரதேசத்தில் 26 வயதுடைய சகோதரனை கொலை செய்த 14 வயது சிறுவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இரு சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி 14 வயதுடைய சிறுவன் தனது மூத்த சகோதரனை கத்தியால் தாக்கியுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களது தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவரை பார்க்க தந்தை சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 26 வயதுடைய தேக்கவத்தை, பலதொட்ட பகுதியைச் சேர்ந்தவராவார். இந்தக் கொலை தொடர்பாக அவரது 14 வயது சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ பாடத்திட்டத்தை தழுவியது

Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்பார்ப்பும் உரையும்

**அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய உரை பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் தீர்வு ஆகியன தொடர்பில் அரசின் கொள்கை முடிவை, எதிர்காலத் திட்டங்களை வெளிப்படுத்துவதாக அமையும் என்று அதிகம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஒரு சில விடயங்கள் தவிர உரையின் பெரும் பகுதி அரசியல் விளக்கக் குறிப்புகளாக மட்டுமே இருந்தன என்பது விசனத்துக்குரியது.**

**நாட்டு மக்களும் வெளி உலகும் இலங்கை எந்த வழி வகைகளில் இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரப்போகிறது என்பதை அறியக் காத்திருக்கும்போது, கடந்த காலங்களைப் பற்றிப் பேசிக்கொண்டும், நாம் அதிலிருந்து வெளியே வந்தாகவேண்டும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துக் கொண்டும் இருப்பது போதுமானதல்ல.**

**அரச தலைவரின் உரையில் இருந்து, அரசின் தனி நபர் வருமான வரி போன்ற முடிவுகளில் பின் வாங்கப்போவதில்லை என்பது தெரிகிறது. அத்தகைய முடிவுகள் தனது பிரபலத்தைக் கேள்விக் குறியாக்கினாலும் அரசியலைச் சவாலுக்குட்படுத்தினாலும்கூட அதனைத் தொடரப் போவதாகவே அவர் சொல்லியிருக்கிறார்.**

**பன்னாட்டு நாணய நிதியத்தைத் தவிர இப்போதைக்கு மீட்சிக்கான திட்டம் எதுவுமில்லை. அதனால் நாணய நிதியத்தை முழுமையாகத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் அவரது அரசு தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடும் என்பது புலனாகின்றது.**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தவிர அரசியல் தீர்வு முயற்சிகள் எவையும் விரைவில் எடுக்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை. தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளாகச் சுட்டிக்காட்டப்பட்ட அரசியல் கைதிகள் விடுதலை, நில அபகரிப்புப் பிரச்சினை, காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றை அவர் நினைவில் வைத்திருக்கின்றபோதும் அவற்றைத் தீர்ப்பதற்கான கால வரையறைகள் எவையும் இல்லை. ஒருவேளை இந்த உடனடிப் பிரச்சினைகளைத் தீர்பதற்கே அவருக்கு இந்தப் பதவிக் காலம் போதாமலும் போகலாம்.**

**அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வரி அதிகரிப்பைத் தவிர உடனடித் திட்டம் வேறெதுவும் அவரது கைவசம் இல்லை. அதனால் இன்னும் குறைந்தது இந்த வருடக் கடைசி வரையாவது மக்கள் இந்தப் பேரவலத்தைச் சுமையைத் தாங்கிக் கொள்வதற்குத் தயாராக இருக்கவேண்டும்.**

**இவை தவிர, பொருளாதார மீட்சிக்கு அடுத்த 6 மாதங்களுக்குள், ஒரு வருடத்திற்குள், 2 வருடங்களுக்குள், 5 வருடங்களுக்குள் என்ன செய்யப் போகிறார், அதனால் எதிர்பார்க்கப்படும் அடைவுகள் என்ன, அந்த அடைவுகளை அடைவதற்காக அனைத்து இன, மத சமூகங்களையும் ஒன்றிணைப்பதற்கான வழிவரைபடம், கால வரையறை என்ன என்பது தொடர்பில் எல்லாம் அவர் எதவும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட தெளிவான திட்டம் எதுவும் அவரிடமில்லை.**

**நாட்டை முன்னேற்ற கடினமான முடிவுகளை இப்போது எடுத்தாகவேண்டும் என்பதற்கப்பால் தெளிவான திட்டமிடலைச் செய்யவேண்டியிருக்கிறது என்பதை அவரிடமிருந்த கேட்பதற்கல்ல, அது என்ன திட்டம் என்பதை அறிவதற்கே மக்கள் விரும்புகின்றார்கள். எப்போது அதைச் சொல்ல, செய்யப் போகிறார் அவர் என்பதுதான் தெரியவில்லை.**

# "பிரபலமற்ற தீர்மானங்களை தொடர்ந்தும் எடுப்பேன்"

## நாடாளுமன்றத்தில் ரணில் நேற்று அறிவிப்பு



நாட்டின் பொருளாதார மீட்சிக்காகத் தொடர்ந்தும் பிரபலமற்ற முடிவுகளை எடுப்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது அமர்வை தொடக்கி வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று கொள்கைப் விளக்க உரையாற்றினார். அதில் அவர் தெரிவித்ததாவது:

கடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது பாடசாலை மாணவ மாணவிகள் தேசிய கீதம் மற்றும் ஜயமங்கள கீதம் இசைத்த போது அவர்களது எதிர்காலத்தைப் பாதுகாத்தல் சம்பந்தமாக நான் சிந்தித்தேன். இந்த மாணவ மாணவிகளின் மனங்களில் அவர்களது எதிர்காலம் பற்றி நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை காணப்படுகின்றதா?

சுதந்திர தின நிகழ்வுக்காக இலங்கைக்கு வந்த பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் திருமதி பெட்ரீசியா ஸ்கொட்லண்ட் அன்னையில் எமது நாட்டின் இளைஞர் குழுக்களுடன் கலந்துரையாடினார். அதன் போது பெரும்பாலான இளைஞர் யுவகள், நீண்ட காலமாக இடம்பெற்று வந்த விடயங்கள் காரணமாக நாட்டின் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையினை இழந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்த இளைஞர் யுவதிகளின் மனங்களில் எதிர்காலம் பற்றி நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை காணப்படுகின்றதா?

சுதந்திர தினத்துக்குப் பிந்திய தின ஞாயிறு சண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஒரு விசேட சிறப்பிதழ் வெளியிடப்பட்டது.

மதீசா உடவத்த இவ்வாறு கூறுகின்றார்.

நாட்டை விட்டுச் செல்லும் எண்ணம் என் மனதில் அடிக்கடி உதித்த போதும் எதிர்பார்ப்பின் சியதோர் ஒளிவிளக்கு இன்னமும் என் மனதில் ஒளிர்விடுகிறது. அது இப்பூமிக்கு என்னை சமீபமாக்குகிறது. நான் இன்னமும் இலங்கையை கைவிடவில்லை.

கிளிபேர்ட் பிரணாந்து இவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்.

நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நான் எண்ணாத போதும் இலங்கையில மாற்றம் நிகழும் என நான் எதிர்பார்க்கின்றேன். நம் அனைவரதும் மனோபாவங்கள் மாற்றமடைதல் வேண்டும். நாம் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். சட்டத்துக்கு கட்டுப்படுதல் வேண்டும். மற்றவர்கள் மீது அனுதாபம் காட்டுதல் வேண்டும்.

சிலானி விஜேசிங்க இவ்வாறு கூறுகின்றார்.

நான் எனது நாட்டை விட்டுச் செல்ல மாட்டேன். தற்போது நாடு அடைந்துள்ள நிலைமையிலிருந்து அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தேவை எனக்குள்ளது. இந்த நெருக்கடியான வேளையில், நாட்டுக்கு மனிதவளம் அத்தியாவசியமான வேளையில் நாட்டை விட்டுச் சென்று நிலைமை சீரான பின்னர் மீண்டும் வருபவர்கள் எனக்குத் தேவையில்லை.

இக் கருத்துக்களை வாசிக்கின்றபோது அண்மையில் அநுராதபுரத்தில் என்னைச் சந்திப்பதற்கு வந்த இரட்டை சகோதரிகள் எனது ஞாபகத்துக்கு வருகிறார்கள் பல்லேகம ஹேமரதன தேரர் அவர்களுக்கு நியமனப் பத்திரம் வழங்கும் நிகழ்வின் இறுதியில் இந்த இரண்டு சிறுமிகளும் என்னைச் சந்தித்தார்கள். அவர்கள் குருநாகல் மலியதேவ பெண்கள் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்கின்றார்கள். அவர்களின் பெயர் நமதி பெரேரா மற்றும் செனுதி பெரேரா. அவர்கள் பாடல் ஒன்றைப் பாடுகிறார்கள். அப்பாடலின் இறுவட்டு ஒன்றை எனக்குத் தந்தார்கள். பாடலின் தலைப்பு – நாட்டை விட்டுச் செல்ல மாட்டேன். எனது உரையின் பின்னர் அப் பாடலை ஒளிபரப்புமாறு நான் தொலைக்காட்சி ஊடகங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாணவ மாணவிகள், இந்த இளைஞர் யுவதிகள் எமது நாட்டின் எதிர்கால சந்ததியினர் ஆவார்கள். நாட்டை விட்டுச் செல்லாது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பிரார்த்தனை செய்யும் எதிர்காலச் சந்ததியினர் ஆவார்கள். அவர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவது எமது அனைவரதும் பொறுப்பாகும். இந்த சபையில் உள்ள உங்களுடைய பொறுப்பும் அதுவாகும். அனைத்து இலங்கையர்களதும் பொறுப்பு அதுவாகும்.

கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரை தொடக்கி வைத்து, நான் கருத்துக்களை முன்வைத்த சந்தர்ப்பத்தில் நாடு இருந்த நிலைமை பற்றி உங்களுக்கு நினைவிருக்குமென நான் நம்புகிறேன். கடந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை சமர்ப்பித்த வேளை நாடு இருந்த நிலைமையும், அதேபோல் ஏழு எட்டு மாதங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையும் உங்களுக்கு நினைவிருக்கும்.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. பரீட்சைகள் நடாத்த முடியாதிருந்தது. உரம் இன்றி விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. விவசாயிகள் நிர்க்கதியாகி இருந்தார்கள். சுற்றுலாக் கைத்தொழில் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. பத்து பன்னிரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டு காணப்பட்டது. எரிவாயு அறவே இல்லாமல் இருந்தது. நகர்ப்புற வீடுகளில் குடியிருப்பவர்கள் உணவு சமைக்க முடியாத நிலையில் இருந்தார்கள். மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் வரிசைகளில் நாள் கணக்கில் அலைக்கழிய நேரிட்டது. களைப்புற்ற மக்கள் தமது உயிர்களை வரிசைகளில் நின்ற நிலையில் இழந்தார்கள். அழுத்தத்தை பொறுத்துக்கொள்ள இயலாமல் மக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

ஆனாலும் இன்று நிலைமை மாற்றமடைந்துள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இத்தகைய அழுத்தங்களை மெது மெதுவாக குறைப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. பொருளாதாரம் தற்போது ஓரளவு உறுதிப்பாட்டை அடைந்துள்ளது. மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்கள். அபாயகரமான தொங்கு பாலத்தில் இலங்கைத் தாயை வெகுதூரம் பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு எம்மால் முடிந்துள்ளது. நாம் அவ்வாறு பயணித்த பாதை இலகுவானது அல்ல. ஆனாலும் பயணம் இன்னமும் முடிவடையவில்லை.

வீழ்வதற்கு நெருங்கியிருந்து அரச நிதி முறைமையைப் பாதுகாப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணித்தோம். அரச செலவினங்களை மட்டுப்படுத்தினோம். வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் காரணமாக வரி வருமானம் வீழ்ச்சியடைந்ததனை நாம் அறிவோம். 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் தொழில் முயற்சிகள், நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் 16 இலட்சம் பேர்கள் வரி செலுத்தினார்கள். 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் வரி செலுத்தும் எண்ணிக்கையில் 5 இலட்சம் வரை வரை வீழ்ச்சி காணப்பட்டது. அரசின் வரி வருமானம் படுமோசமாக வீழ்ச்சியடைந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் திட்டவட்டம்

கொழும்பு, பெப். 09

இலங்கை மின்சார சபைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை அரசியல் அழுத்தங்களால் மீளப் பெற்றுக்கொள்ளுமாறு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அரசியல் அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. பதவி வகிக்கும் வரை ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அமைய செயற்படுவேன் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உயர்தர பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் இரவு 07 மணிக்கு பிறகு மின்விநியோக தடையை அமுல்படுத்த வேண்டாம் என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கிய ஆலோசனையை இலங்கை மின்சார சபை செயற்படுத்தவில்லை.

பரீட்சை காலத்தில் மின்விநியோகம் துண்டிக்கப்படுவதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது,

இதனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமை மீறல் செயற்பாடாக கருதி மின்சார துறைசார் தரப்பினரை ஆணைக் குழுவிற்கு அழைத்து பேச்சுகளில் ஈடுப்பட்டது.

பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் குறிப்பாக இரவு வேளைகளில் மின்விநியோகத்தைத் துண்டிக்க வேண்டாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனைகளை இலங்கை மின்சார சபை செயற்படுத்தவில்லை. மின்சார சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அப்பாற்பட்டு செயற்படுகிறது.

இலங்கை மின்சார சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தோம்,இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகித்த மொஹான் சமரநாயக்க, ஏ. விக்கிரமசிங்க ஆகியோர் என் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பதவி விலக்கினார்கள்.

இலங்கை மின்சார சபைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை அரசியல் அழுத்தங்களால் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் தற்போது குறிப்பிடுகிறார்கள்.

ஆணைக்குழுவின் உறுப்பினராக டக்லஸ் நாயகக்கார கடந்த ஞாயிற்றுக்கிழமை நியமிக்கப்பட்டார். தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விவரங்கள் ஏதும் அவருக்கு தெரியாது, ஆனால் அவரும் வழக்கை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு தற்போது குறிப்பிடுகிறார்.

இவர்கள் ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அமைய செயற்படுகிறார்களா, அல்லது இவர்களுக்கு பிள்ளைகள் உள்ளார்களா என்பதை நான் அறியவில்லை.

மின்விநியோக துண்டிப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு தற்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலை காணப்படுகிறது.

எனக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய குற்றப்பத்திரத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

அவரின் குற்றப்பத்திரத்தைக் காண ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். பதவியில் இருக்கும் வரை ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அமைய செயற்படுவேன். எந்தக் காரணிகளுக்காகவும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை. – என்றார்.




## பாடசாலை சீருடைகளை விரைவாக வழங்க முடிவு!



சாலை சீருடைகளை மார்ச் 15 ஆம் திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்கால கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேவையான சீருடைகளில் எழுபது சதவீதத்தை வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட சீன அரசாங்கம், ஏற்கனவே தனது முதல்தொகுதியை அனுப்பியுள்ளதாகவும், எஞ்சிய முப்பது சதவீதத்தை உள்ளூர் தனியார் வர்த்தகர்கள் வழங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## முத்திரை விலைகள் அதிகரித்த போதிலும் அவற்றின் விற்பனையும் அதிகரித்துள்ளது!

முத்திரைகளின் விலை அதிகரித்துள்ள போதிலும் முத்திரைகளின் விற்பனையும் அதிகரித்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முத்திரை விற்பனை மூலம் கிடைத்த வருமானம் கடந்த ஆண்டு (2022) ஓகஸ்ட் முதல் டிசெம்பர் 31வரை 74 கோடியே 20 லட்சம் ரூபாவால் அதிகரித்துள்ளதாக பதில் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தகவல்தொழில்நுட்பத்துடன் தபால் திணைக்களம் முன்னோக்கி நகர்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 261**

இந்தியாவின் தற்சமய அரசியலில், பிராந்தியத்தின் சூழ்நிலைகளில், தமிழ் மக்களுக்காக இந்திரா காந்தி சிந்தித்தமை போலவோ, ராஜீவ் காந்தி எடுத்த முடிவுகள் மாதிரியோ, இந்தியப் படைகளுடன் தலையீடு செய்து, தமிழர் தாயகங்களை பாதுகாப்பது போன்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்புகள் இல்லை. அத்தகைய தலையீடுகள் சிங்கள மக்களுடன் நிரந்தர முரண்பாடுகளையும், தங்களது பொருளாதார முதலீடுகளுக்கு குந்தகத்தையும் விளைவிக்கும் என்பதால் பிரதமர் மோடியோ அல்லது வெளி விவகாரத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரோ அதாகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதில்லை.

மிகக் கிட்டடியில் கலாநிதி ஜெய்சங்கர் ஐரோப்பிய ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த பதில்களில், 'இந்தியா தனக்காக –தனதுநலனுக்கான–கொள்கைகளை மேற்கொள்வதில் தவறில்லை, ஏனெனில் உலகில் ஐந்தில் ஒரு பங்கு சனத்தொகையை இந்தியா கொண்டிருக்கிறது, நாங்கள் உலகின் நான்கு அல்லதுஐந்தாவதுநிலையில்பொருளாதார வளர்ச்சியில் உள்ளோம்' – என்றார்.

"உக்ரேனில் நடக்கும் கொடுமைகளுக்கு ஐரோப்பாவின் நாடுகளோடு சேர்ந்து இந்தியா எதிர்ப்புக் குரல் தராமல் விட்டு விட்டு, சீனாவோடு இந்தியாவுக்கு இருக்கும் பிரச்சினைகளுக்கு ஐரோப்பிய நாடுகள் குரல் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா? இந்தியாவை ஏன் நம்ப வேண்டும்?" – என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கவில்லையே அவர் இவ்வாறு கூறினார்.

"சீனாவோடு எங்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. ஆனால் அதனை சமாளிக்கக் கூடிய திறனும், திட்டங்களும் கூட எங்களிடம் உள்ளன. ஆசியநாடுகளில்நடந்த எத்தனையோ பிரச்சனைகளை அவை தான் சம்பந்தப்படாதவை எனக் காட்டி ஐரோப்பாகை கழுவி விட்டுள்ளது. ஆனால் தங்களுக்கு – ஐரோப்பாவுக்கு – ஒரு பிரச்சினை எனில் அதில் முழு உலகமும் ஈடுபட வேண்டும் என அது எதிர்பார்க்கிறது. இந்த மனோபாவம் மாற வேண்டும். ஆசிய பிராந்தியத்தின் சவாலை நாங்களே கவனித்துக் கொள்வோம்." – என்றார்

இந்தியா ஆக்கும் கொள்கை திட்டங்களில், சிங்கள மக்களின் நிரந்தர உடன்பாடுகளில், அவர்கள் சீனாவின் பக்கம் சாய்ந்து விடாமல் இருப்பதில் குறியாக உள்ளார்கள். இந்த யதார்த்தங்களைப் புறந்தள்ளி, தமிழ் மக்கள் தங்களதுவலிகளின்கோபதாபங்களை தொடர்ந்து கொள்ள போகின்ற வகையில் செயல்படுவது அவர்களுக்கே தீங்காகலாம்.

அது மாத்திரமல்ல வெளிநாடுகளில் இருந்து வரும் சொந்தங்களின் பணத்தில் வீம்பும் பெருமைகளும் காட்டாமல், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, தமிழ் மக்கள் தன்னிறைவு பெற்று, எதற்கும் கொழும்பையே தங்கி இருக்கும் மனப்பாங்குகளில் இருந்து விடுபட வேண்டும். அதற்காக வளரும் அரசியல் சூழல்களை பாவித்து, வளங்களை தரக்கூடிய திட்டங்களை இந்திய முதலீடுகளுடன் பெரும் தொழிற்பேட்டைகள், சிறு கைத்தொழில்கள் மாத்திரமல்ல ஏற்றுமதி, இறக்குமதி, விவசாயம், உல்லாச துறை போன்றவை வியாபித்த பொருளாதார முன்னெடுப்புகளை தோற்றுவிக்க வேண்டும். பலாலி விமான நிலையம் சர்வதேச மையமாக மாறுவதும், காங்கேசன் துறை – காரைக்குடி, மன்னார் – இராமேஸ்வரம் துறைமுகங்கள் புத்துயிர்க்கப்பட்டு, இவற்றுக்கிடையே சேவைகள் ஆரம்பிக்கப்பட, உள்ளூர் ஏற்றுமதிகள் கொழும்பு வாயிலாக செல்ல வேண்டிய தேவையில் இருந்து விடுபட்டு, சிறிது நேரத்தில், குறைந்த செலவில், பரந்த நிலப்பரப்புகளை சென்றடையும் வாய்ப்புகள் கிட்டும். ஈழத் தமிழ்ப் பகுதிகளை அண்டி தமிழ்நாடு மாத்திரமல்ல, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகம் போன்ற மாநிலங்கள் பொருளாதார ரீதியில் எவ்வளவோ வளர்ந்துள்ள நிலையில், கூட்டு முயற்சிகளுக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன.



புதிதாக உருவாக வேண்டிய சர்வதேச கட்டமைப்பு பொருளாதார அலகின் மூலம் இந்த வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் நாட்டங்கள் கொள்ள வேண்டும்.



எத்திசையில் போவது என்பது மக்கள் கைகளில் உண்டு. அவர்கள் தீர்மா னித்துக் கொள்ள வேண்டும். நாங்கள் வழிகாட்டிகளாக இருக்கலாம். ஆனால் வாழ்வு உங்களுடையது.

மக்கள் தேர்ந்தெடுக்கும் தலைவர்களைப் பொறுத்து அந்த மக்களைப் பற்றியும் புரிந்து கொள்ளலாம் அல்லது மக்களை போலத்தான் தலைவர்களும் என்ற பேச்சு வழக்குகள் உண்டு.

மக்கள் எங்கே நிற்கின்றார்கள் என கண்டு, மீண்டும் அவர்கள் பாதையில் சந்திக்கலாம். அதுவரையில் இந்த பதிவை முடித்துக் கொள்கிறேன்.

### பின்னுரைக் குறிப்பு

இந்தத் தொடர் 260 நாள்களுக்கு வருவதில் என்னுடன் அயராது உழைத்த 'காலைக்கதிர்' நிர்வாக உறுப்பினர்களுக்கும் அதன் (முன்னாள்) ஆசிரியர் நண்பர் வித்தியாதரனுக்கும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். நேர வித்தியாசங்கள் உடன் இரவில் எழுதி அனுப்பியவற்றை, அச்செடுத்து, பக்க வடிவமைப்பு செய்து, அதற்கு மெருகூட்டக் கூடிய படங்களைத் தேர்ந்தெடுத்து, அதிகாலையில் வெளியிடுவது சுலபமான காரியம் அல்ல. அதனைப் பொறுப்பெடுத்து இந்த தொடர் வெளிவர உறுதுணையாக இருந்த காலைக்கதிர் நிர்வாக உறுப்பினர்களுக்கு எவ்வளவுதான் நன்றி சொன்னாலும் ஈடாகாது – அதில் எல்லாமாக வித்தியாதரனுக்கு.

அதே அளவு நன்றி என்னுடன் 'எள்ளோடு காய்ந்த எழுப்புழுக்கை போல' இரவும் பகலும், எழுதும் நேரமெல்லாம் என்னை சோரவிடாமல் உற்சாகம் தந்த மனைவிக்கும் தர வேண்டும். அரசியல் அவருக்கு அத்துபடி அல்ல. ஆகவே எழுதியவற்றில் அவருக்கு ஆர்வங்கள் இருக்கவில்லை. ஆனால் பாசம், அன்பு என்பவற்றுக்காக ஓர் எழுத்தாளனின் மனைவி அனுபவிக்கும் நிராசைகள், பராமுகம் எல்லாவற்றையும் ஏற்று, சகித்துப் பயணித்தார்.

அவ்வப்போது கருத்துக்கள், அறிவுரைகள் தந்த நண்பர்கள் பலர். எல்லோரையும் குறிப்பிடுவது முடியாத காரியம். அவர்களது கருத்துக்களையும் அறிவுரைகளையும் நான் அன்புடன் அரவணைத்துக் கொண்டேன். எல்லோருக்கும் எனது நன்றிகள். அவை இந்தத் தொடரை ஆக்கபூர்வமாக்கவும் ஆர்வத்தை ஏற்படுத்தவும் நெம்புகோலாகின.

ஆனாலும் இருவரை அவர்கள் எனக்காக தந்த நேரங்களுக்காக குறிப்பிட வேண்டும். ஒன்று – மெல்போனில் முருகபூபதி. தினமும் ஆக்கத்தை பற்றி அறிவுறுத்துவார். மற்றவர் பரிசிலிருந்து ச.வி.கிருபாகரன். வரலாற்று வளர்ச்சிகளில் நாங்கள் கருத்து வேற்றுமைகள் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களுக்கு தீர்வு வரவேண்டும், அவர்கள் வாழ்வில் நிம்மதி தேவை என்ற துடிப்பில் அவர் தந்த கருத்தாக்கங்கள் நிறையவே இருந்தன.

காலைக்கதிர்
Kalaikkathir

இந்தத் தொடர் வரலாறுகளையும் இணைத்ததால் அவற்றின் தொகுப்பிலும் பதிவிலும் தகுந்த கவனங்கள எடுத்தேன். எப்பொழுதும் சிறிது மாறுபட்டாலும், அவற்றில் ஊறி இருந்த ஊடக ஆசான், ஜாம்பவான் வித்தியாதரன் அவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்தங்கள் மேற்கொள்ள வைத்தார்.

பக்க சார்பில்லாமல் தமிழ் மக்கள் நிலையில் இருந்து இவை பதியப்பட்டவை. அவற்றை மறுதலித்து அம்புகள் என்னை நோக்கி எறியப்படவில்லை. அந்த அளவில் ஓரளவு நேர்த்தியாக இந்த வரலாற்றுப் பதிவை காலைக்கதிருடன் கொண்டு வந்ததில் திருப்திப்படுகிறேன்.



இரண்டு, மூன்று சம்பவங்களை வரலாற்றுக்காக குறிப்பிட வேண்டும். அவற்றுடன் நாளை இத்தொடரை பூர்த்தி செய்கிறேன்.

(நாளையுடன் முற்றும்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# “பிரபலமற்ற தீர்மானங்களை ..........

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு விளையும் அழிவினைப் புரிந்து கொண்ட பெரும்பாலான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மீண்டும் 2019 ஆம் ஆண்டு காணப்பட்ட வரி முறைக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஶ்ரீலங்கா நிர்வாக சேவை சங்கம் 2022 ஏப்ரல் மாதம் பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கான துரித முன்மொழிவுத்திட்டம் ஒன்றை முன்வைத்தது.

முன்மொழிவுத்திட்டத்தின் பிரிவு 3.3 இன் கீழ் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உழைக்கும் போதே வரி செலுத்தும் முறைமையினை மீண்டும் அறிமுகப்படுத்தல்.

அரச தொழில்முயற்சிகளில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தொழிற்கொள்வோர் ஊடாக அன்றி தனிப்பட்ட ரீதியில் தமது சம்பளத்திலிருந்து வரி செலுத்தல்.

நிறுத்திவைக்கும் வரி முறைமையினை மீண்டும் அறிமுகப்படுத்தல்.

அனைத்து வரிவிடுதலைகளையும் இடைநிறுத்தல்.

வருமான வரி செலுத்த வேண்டிய வருமான மட்டம் மற்றும் பெறுமதி சேர் வரி செலுத்த வேண்டிய புரள்வு எல்லைகளை திருத்துதல்.

ஶ்ரீலங்கா நிர்வாக சேவை சங்கமானது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே இந்த முன்மொழிவினை சமர்ப்பித்தது. தற்போது நாம் இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துகின்றோம். ஆனாலும் இவ்வாறான ஒரு வரிக்கொள்கை தேவை எனத் தெரிவித்தவர்கள் இன்று வரிக்கொள்கையினை விமர்சிக்கின்றார்கள்.

வரி அறவிடுவதற்கான புதியதொரு கொள்கையினை அறிமுகப்படுத்தல் அரசியல் ரீதியாக பிரபல்யம் மிக்கதொரு தீர்மானம் அல்ல. நினைவிற்கொள்ளுங்கள். எனக்குத் தேவை பிரபல்யமடைவதற்கான வாய்ப்பு அல்ல. எனக்குத் தேவை இந்த நாடு அடைந்துள்ள நெருக்கடி நிலையிலிருந்து அதனை மீளக்கட்டியெழுப்ப வேண்டியதே ஆகும். ஆம். நான் நாட்டுக்கான பிரபல்யமற்ற தீர்மானங்களை எடுப்பேன். அத்தகைய தீர்மானங்களின் முக்கியத்துவத்தை இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பெரும்பாலானோர் புரிந்துகொள்வார்கள்.

வரி செலுத்த வேண்டிய வருமான எல்லையினை ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க வேண்டுமென சிலர் கூறுகின்றார்கள். உழைக்கும் போதே வரி செலுத்தும் முறையை நீக்க வேண்டுமென மற்றும் சிலர் கூறுகிறார்கள். நாம் விருப்பத்துடன் இந்த வரிகளை விதிக்கவில்லை. ஆனாலும் எமக்கு விருப்பமானவற்றை செய்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. விரும்பாவிட்டாலும் சரியானதைச் செய்ய வேண்டும்.

உழைக்கும்போதே செலுத்தும் வரியை நீக்கினால் நாடு 100 பில்லியன் ரூபாவை இழக்க நேரிடும். வரி எல்லையை இரண்டு இலட்சம் வரை அதிகரித்தால் நாடு 63 பில்லியன் ரூபாவை இழக்கும். இழக்கப்படும் மொத்த தொகை 163 பில்லியன் ரூபாவாகும். இவ்வளவு பெரும் தொகையை இழக்கும் நிலையில் நாம் இல்லை.

தற்போது நலிவுற்ற பொருளாதாரத்திற்கு உரிமை கோருவதன் காரணமாக அனைவராலும் வரிச்சுமை பெருமளவில் உணரப்படுவதை நாம் அறிவோம். இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு முக்கிய காரணம் உள்ளது. தற்போது எமது நாட்டில் கூடுதலான அளவு வரியினை பொதுமக்களே செலுத்துகின்றார்கள். நேரடியாக வரி செலுத்தவேண்டிய நபர்களிடம் மற்றும் நிறுவனங்களிடம் உரிய முறையில் வரி அறவிடப்படாமை காரணமாக அனைத்து இலங்கையர்களும் மறைமுக வரியாகப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்துகின்றார்கள். வரி செலுத்துவதற்கு தேவை அற்ற பெருமளவு எண்ணிக்கையானோர் தம்மை அறியாமலேயே வரி செலுத்துகின்றார்கள். அத்தகைய வரி மறைமுகவரி என அழைக்கப்படுகிறது.

உலகின் ஏனைய நாடுகளில் கூடுதலான அளவு வரி அறவிடப்படுவது வரி செலுத்த வேண்டிய நபர்களிடமே ஆகும். இந்தியா – நேரடி வரி 67 சதவீதம். மறைமுக வரி 33 சதவீதம். 2021இல் பங்களாதேஷ் – நேரடி வரி 68 சதவீதம். மறைமுக வரி 32 சதவீதம். நேபாளம் – நேரடி வரி 69 சதவீதம். மறைமுக வரி 31 சதவீதம். 2021இல் தாய்லாந்து – நேரடி வரி 63 சதவீதம். மறைமுக வரி 37 சதவீதம். 2020இல் மலேசியா – நேரடி வரி 66 சதவீதம். மறைமுக வரி 34 சதவீதம். 2021இல் இந்தோனேசியா – நேரடி வரி 60 சதவீதம். மறைமுக வரி 40 சதவீதம். ஆனாலும் எமது நாட்டில் நிலைமை அதற்கு மாற்றமானது ஆகும். 2021இல் எமது நாட்டின் நேரடி வரி 21 சதவீதம். மறைமுக வரி 79 சதவீதம்.

ஆகவே இந்த வரி முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக நாம் நடவடிக்கை எடுத்தல்வேண்டும். அப்போது ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமை குறைவடையும்.

பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் பணவீக்கம் உயர்வடைகிறது. பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. தொழில்கள் அபாயத்தை எதிர்நோக்குகின்றன. தொழில்முயற்சிகள் வீழ்ச்சியடைகின்றன. சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் வாழ்க்கை நடத்துவது கடினமானதாக உள்ளது. ஆனாலும் இன்னும் ஐந்து ஆறு மாத குறுகிய காலம் இத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியுமாயின் எமக்கு தீர்வை நோக்கிச் செல்ல முடியும். இவ்வாறு முன்னோக்கிச் சென்றால் ஆண்டின் மூன்றாவது நான்காவது காலாண்டுகளில் அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவினை செலுத்துவதற்கு எம்மால் முடியும். தனியார் துறைக்கு சலுகைகளை வழங்க முடியும். முழு நாட்டு மக்களதும் கைகளை இன்று உள்ளதை விடவும் வளமாக்க முடியும். தொழில் மூலமான வருமான மார்க்கத்தை அதிகரிக்க முடியும். வங்கி வட்டிவீதத்தைக் குறைக்க முடியும். மேலும் சுமார் மூன்று ஆண்டுகள் செல்லும்போது இன்று ஈட்டும் வருமானத்தை விட சுமார் 75 சதவீத வருமானத்தைப் பெற முடியும்.

தற்போது அனைத்து துன்பங்களுக்கும் மத்தியில் நலிவுற்ற பொருளாதாரம் காரணமாக அவதியுறும் வறுமையில் வாடும் குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். இதற்காக உலக வங்கி எமக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியது.

ஆயினும் எமது நாட்டில் நிவாரண உதவிகள் வழங்கும் முறை உருச்சிதைவுற்றுக் காணப்படுகிறது. அதிக வருமானம் உழைக்கும் நபர்கள்கூட நிவாரண உதவிகளைப் பெறுகின்றார்கள். நாம் இந்த நிலைமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். உண்மையான வறுமை சமூகத்தை நாம் அடையாளம் காண்கின்றோம். நிவாரண வங்கிக் கணக்கின் ஊடாக அவர்களுக்கு நேரடியாக பணம் செலுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை நாம் தயாரித்த வருகின்றோம்.

ஆனாலும் சில குழுக்கள் இந்தப் பயணத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் வரி குறைக்கப்படும் – சம்பளம் அதிகரிக்கப்படும் போன்ற கற்பனைக் கதைகளைக் கூறுகின்றார்கள். பல்வேறு முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

நான் ஒருபோதும் செய்ய முடியாதவற்றைக் கூற மாட்டேன். அதிகாரத்துக்காகப் பொய் கூற மாட்டேன். வரவு செலவுத்திட்ட உரையின் போதும் நாடாளுமன்றத்தை திறந்துவைக்கும் போதும் நான் கூறிய அனைத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். அதன் மூலம் பொருளாதாரத்தில் ஓரளவு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

மறைப் பொருளாதாரத்தில் இருந்து நேர்கணிய பொருளாதாரத்தை நோக்கி நாம் தற்போது பயணம் செய்து வருகின்றோம். 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் நேர்கணிய பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நான் ஜனாதிபதியாக தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது நாட்டின் பணவீக்கம் 70% ஆகும். எமது செயற்பாடுகள் காரணமாக 20203 ஜனவரி மாதமளவில் அதனை 54% சதவீதமாகக் குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அதனை 54 சதவீதம் குறைப்பதற்கு எம்மால் முடிந்தது. அதனை தனி இலக்கத்திற்கு கொண்டு வருவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

2022ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எம்மால் முடிந்தது. அதற்காக உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் பெருமளவு பாடுபட்டார்கள். அதே போல் இறக்குமதி செலவினத்தை 18 பில்லியன் டொலர்கள் வரை மட்டுப்படுத்த எமக்கு முடிந்தது. வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்கள் இந்த இக்கட்டான நிலையில் தாய் நாட்டுக்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினை வழங்குகிறார்கள். 2022ஆம் ஆண்டு இறுதியளவில் 4 பில்லியன் டொலர் வெளிநாட்டு அந்நிய செலாவணியை அவர்கள் எமக்கு வழங்கினார்கள்.

எமது தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள், அவர்களுக்கு பல்வேறு வகையான அழுத்தங்களை வழங்கிய ஒரு பின்னணியிலேயே இந்த அர்ப்பணிப்பினை நாட்டுக்காக மேற்கொண்டார்கள். ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் இலங்கைக்கு பணம் அனுப்புவது நாட்டுக்காக அன்றி அதிகாரத்தில் உள்ள அரசியல் கட்சிக்காக அல்ல என்பதனை அவர்கள் நிரூபித்துள்ளார்கள். அவர்கள் அனைவரையும் நாம் கௌரவிக்கின்றோம்.

பெரும்பாலும் பூச்சியத்துக்கு வீழ்ந்த எமது அந்நிய செலாவணி ஒதுக்கீட்டினை எம்மால் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு முடிந்துள்ளது.

சுற்றுலாக் கைத்தொழிலை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. வீதிகள் முழுவதும் குறுகிய அரசியல் ரீதியான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட தடைகளுக்கு மத்தியில் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தார்கள். உலகின் சிறந்த 10 சுற்றுலா இடங்களில் இலங்கையும் பெயரிடப்பட்டது. இந்த ஜனவரி மாதத்தில் ஒரு இலட்சத்துக்கும் அகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளார்கள். அது ஒரு சாதனையான எண்ணிக்கை ஆகும்.

இவ்வாறு அனைத்து துறைகளிலும் நாம் முன்னேற்றம் கண்டு வருகின்றோம்.

கிரேக்கம் சில காலங்களுக்கு முன்னர் எம்மைப் போன்றதொரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. வங்குரோத்து நிலையை அடைந்தது. நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைத்து வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டது. மீண்டும் கடன்களைச் செலுத்தும் பலத்தினை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு 13 ஆண்டுகள் சென்றது. அக்கால எல்லைக்குள் மூன்று தடவைகள் ஐஎம்எப் அமைப்பின் உதவி ஒத்தாசைகள் பெறப்பட்டன.

ஆனாலும் நாம் பயணிக்கும் இந்தத் திட்டத்தின் பிரகாரம் முன்னோக்கிச் சென்றால் 2026ஆம் ஆண்டளவில் வங்குரோத்து நிலையிலிருந்து எம்மால் மீள முடியும். நான் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டவாறு நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு இந்த நாடாளுமன்றத்தின் அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்தால், எமக்கு அதற்கு முன்னர் இந்த நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

தற்பொழுது நாம் கடன் மறுசீரமைப்புக்காக எமக்கு கடன் வழங்கிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். அதற்கு மேலதிகமாக ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியுமான ஒரேயொரு இடம் சர்வதேச நாணய திதியம் மாத்திரமே ஆகும். அவர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்படும் அடித்தளத்தின் பிரகாரம் எமக்கு மேற்கொண்டு முன்னோக்கி பயணிக்க முடியும். அது தவிர எமக்கு வேறு எந்தவொரு மார்க்கமும் இல்லை. வேறு மாற்று வழிகள் இருப்பின் அதனை இச்சபைக்கு அறியத் தருமாறு நாம் பயணிக்கும் இந்தப் பாதையினை விமர்சிக்கும் அரசியல் கட்சிகளிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்பொழுது நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளோம். கடந்த செப்டம்பர் மாதமளவில் அடிப்படை இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எம்மால் முடிந்தது. கடன் பேண்தகு தன்மையினை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளது.

அதற்கு ஏற்புடைய வகையில் பரிஸ் சமூகத்துடன் நாம் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். பரிஸ் மாநாட்டில் அங்கத்துவம் வகிக்காத இந்தியா மற்றும் சீனாவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடினோம். இந்தியா எமது கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. ஒருபுறம் பரிஸ் மாநாட்டுடனும் இந்தியாவுடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகிறது. நாம் நேரடியாக சீனாவுடன் கலந்துரையாடல் மேற்கொள்கின்றோம். எமக்கு அனைத்து தரப்பினர்களிடமிருந்தும் சாதகமான பதில் கிடைக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளின் பிரவேசம் மற்றும் சீனாவின் பிரவேசம் ஆகியவற்றுக்கு இடையில் ஒருமைப்பாட்டைக் கொண்டு வருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த முயற்சியின்போது எமக்கு உதவி செய்யும் அனைத்து நாடுகளுக்கும் எமது நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சர்வதேசம் எமக்கு வழங்கும் ஒத்துழைப்பு பிரதிபலிப்பது என்னவெனில் நாம் செல்லும் பாதை சரியானது என்பதாகும். மக்கள் அனுபவிக்கும் அழுத்தம் குறைந்துள்ளமை எடுத்துக் காட்டுவது யாதெனில் இப்பாதை சரியானது என்பதாகும்.

2020 ஆம் ஆண்டு நாம் ஐஎம்எப் அமைப்பில் இருந்து விலகினோம். அவ்வாறான தொலைநோக்கற்ற தீர்மானங்கள் தற்போதைய நிலைமைக்கு காரணமாய் அமைந்துள்ளது. பங்களாதேஷ் தொடர்ந்தும் ஐஎம்எப் அமைப்புடன் இணைந்திருந்த காரணத்தால் அவர்களுக்கு அந்த அமைப்பில் இருந்து வேகமாக நிவாரணங்களைப் பெற முடிந்தது. எமக்கு அனைத்து தொடர்புகளையும் தொடக்கத்திலிருந்து மீண்டும் தொடங்க நேர்ந்தது. எவ்வாறாயினும் நாம் கஷ்டத்துக்கு மத்தியில் தொடக்கத்திலிருந்து பயணத்தைத் தொடர்ந்தோம்.

(தொடரும்.....)

## இந்திய மீனவர் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதிவானிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு பிரதம நீதிவான் பிரசன்ன அல்விஸ், பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய செயற்படுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, அநீதியான வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பால் நாட்டின் பல வைத்தியசாலைகளின் சேவைகள் தடைப்பட்டன.

## நெருக்கடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று அடிப்படையில் பார்க்க வேண்டும். ஒன்று அரசுக்கு எதிரான சர்வஜன வாக்கெடுப்பு. அப்படி இந்தத் தேர்தலைப் பார்த்தல் 90 வீதமான மக்கள் அரசுக்கு எதிராக வாக்களிப்பர்.

இரண்டாவது இந்தத் தேர்தல் முடிவின் அடிப்படையில் அரசு கலைய வேண்டும். அதன் பின் அதிகாரத்தில் இருப்பதற்கான தகுதியை அரசு இழக்கும். நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மூன்றாவது அடுத்து ஆட்சியை யாரிடம் ஒப்படைப்பது என்ற முடிவை மக்கள் எடுக்கும் தேர்தலாக இது அமைய வேண்டும்.

இந்தத் தேர்தலின் பின் ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டும். அந்த ஆட்சி மாற்றம் ஊடாகப் பொருளாதார மாற்றம்

இடம்பெறும். புதிய அரசுக்கு சர்வதேச நாடுகள் உதவும் – என்றார்.

## பிரான்ஸ் தூதுவர் - ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் மற்றும் கலையரசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு, சுதந்திர தினத்தை பொட்டிக் கரிநாளாக அறிவித்த தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டம் என்பன தொடர்பில் பேசப்பட்டன.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் உதவிகளை எவ்வாறு தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு உதவும் வகையில் வழங்க முடியும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில், இலங்கைக்கான பிரான்ஸின் துணைத் தூதுவரும் பங்கேற்றிருந்தார்.

## 13ஐ நடைமுறைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவில்லை.

பதிலாக இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

தேசியகாணிச்சபை ஒன்று உருவாக்கப்படுவதற்கான வரைவு தயாரிக்கப்படும். தேசிய காணிக்கொள்கை வரைவு தயாரிக்கப்படும்.

மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாக கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் குறைவடைந்துள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதன் காரணமாக மாகாண அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாம் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சுகாதார துறை தொடர்பாகவும் இதே போல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரப்பகிர்வுசெயன்முறையினை முறையாக மற்றும் உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும். 1992 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க அதிகாரப் பகிர்வு (பிரதேச செயலாளர்கள்) சட்டம், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவு ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்த) சட்டம்

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்துக்குஇடையில்ஒருங்கிணைப்பு பணிகளை முறைமைப்படுத்துவதற்காக நவீன முறையில் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையினை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ் அனைத்து சட்டங்கள் மற்றும் வரைவுகளை நாம் பாராளுமன்றத்தின் தேசிய சபைக்கு சமர்ப்பிப்போம். அது தொடர்பாக கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தேசிய சபைக்கு வழங்கப்படும்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே மாகாணங்களின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவித மாற்றங்களும் இடம் பெற மாட்டாது – என்றார்.

13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வழங்குவதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையே ரணில் இப்படி மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு பிக்குகள் மற்றும் கடும்போக்குவாதிகளிடமிருந்து எதிர்ப்புக்கள் ஏற்பட்டு வரும் நிலையில் நேரடியான வார்த்தைகளில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் என்று தெரிவிப்பதை அவர் தவிர்த்திருக்கக்கூடும் என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

ரணிலின் உரையில் வடக்கு கிழக்கு தொடர்பில் அவர் முன்வைத்த கருத்துக்கள் வருமாறு:

மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமை சட்டத்தை பாரதூரமான முறையில் மீறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ.நவாஸ் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகள் பற்றி நாம் கவனம் செலுத்துவோம்.

போர் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கின் அபிவிருத்திக்காக புறம்பான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். மல்வத்துஓயா அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்படும். கிழக்கு மாகாண நதிகள் மற்றும் நீரை முகாமை செய்தல், வடமாரச்சி குளம் மற்றும் களப்பு புனரமைப்பு, குடிநீர் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக அதன் மூலம் நீரை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மூலம் இப் பிரதேசங்களின் மின்சாரத் தேவைப்பாட்டை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும். சூரியசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் சக்தி இதற்காக பயன்படுத்தப்படும்.

சுற்றுலாக் கைத்தொழிலுக்காக கூடுதல் வய்ப்பு வழங்கப்படும். முலீட்டு வலயங்கள் அமைக்கப்படும். விவசாய நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

காங்கேசந்துறை துறைமுகம் நவீனமயப்படுத்தப்படும். விரிவாக்கப்படும். திருகோணமலையை நவீன சர்வதேசநகரமாக அபிவிருத்தி செய்யப்படும். மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் – என்றார்.

## விடுவிக்கப்பட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் எடுத்துச் செல்கின்றனர் என்று வீடுகளின் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வலி. வடக்கில் கடந்த 3ஆம் திகதி விடுவிக்கப்பட்ட 108 ஏக்கர் காணியில் ஒரு சில வீடுகள், கட்டடங்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. அவையும் படையினரின் பயன்பாட்டில் இருந்ததனால் முழுமையாக இருந்தன. அந்தப் பகுதியில் எஞ்சியிருந்த கட்டடங்கள் அனைத்தும் படையினரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த வீடுகளில் காணப்படும் பொருட்களையே சீருடைய இன்றி தம்மை இராணுவத்தினர் என்று கூறிக்கொண்டு வரும் குழுவினர் எடுத்துச் செல்கின்றனர் என்கிறனர் உரிமையாளர்கள்.

அவை தமது முகாம்களுக்குரிய பொருட்கள் என்று கூறி அவற்றை அவர்கள் எடுத்துச் செல்கின்றனர் என்ற போதும், பகலில் வராமல் திருடர்கள் போன்று இரவில், அதுவும் சீருடையின்றி வந்து பொருட்களை எடுத்துச் செல்வது ஏன் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். வீடுகள் விடுவிக்கப்பட்ட பின்னர் அவற்றில் இருந்து பொருட்களை எடுத்துச் செல்வது எந்தவகையில் நியாயம் என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

நேற்று இரவு 8 மணியளவில் இவ்வாறு வந்த 10ற்கும் மேற்பட்டவர்கள் பொருட்களை இரகசியமாக எடுத்துச் செல்கின்றனர் என்று வீட்டு உரிமையாளர்களிற்கு நகவல் கிடைத்தை அடுத்து அங்கு விரைந்த அவர்கள், தம்மைப் படையினர் என்று அடையாளப்படுத்திய அந்தக் குழுவினருடன் முரண்பட்டனர். பொலிஸாருக்கும் அது குறித்து அறிவித்தனர். ஆனால் பொலிஸார் வருவதற்கு முன்பாகவே வீட்டு உரிமையாளர்களை அச்சுறுத்தி விட்டு அவர்கள் பொருட்களுடன் வெளியேறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்கள், அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்தி தமது வீடுகளைப் பாதுகாத்துத் தரவேண்டும் என்று வீட்டு உரிமையாளர்கள் வலியுறுத்தினர்.

## சமூகத்தைச் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக சேவை அல்ல. சமூக சீர ழிப்பையே அவர்கள் செய்கின்றனர்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக் கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸவால் முடியாது என்று இல்லை. அவருடன் நல்ல பொருளாதார நிபுணர்கள் உள்ளார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்க நல்ல அனுபவசாலி. அதைத்தான் பார்க்கின்றேன்.

சாராய பார் உள்ளவர்கள் நாடாளுமன்றம் செல்வதற்குத் தடை விதிக்க வேண்டும். நாட்டில் 4 ஆயிரம் சாராய பார்களுக்கு அனுமதிப் பத்திரம் உண்டு. அதில் 2 ஆயிரம் பார்கள் அரசியல் வாதிகளுடையவை.

வட்டிக்காரன் – சாராய கடைக்காரன் – விபசார விடுதி நடத்துகின்றவர்கள் எல்லோரும் நாடாளுமன்றம் வந்தால் நாட்டின் நிலைமை என்ன? அவர்கள் செய்வது சமூக சேவை அல்ல. சமூக சீரழிப்பையே அவர்கள் செய்கின்றனர். நாடாளுமன்றத்திலுள்ள 225 பேரும் ஒன்றுதான் என மக்கள் ஏன் கூறுகிறார்கள். இவ்வாறானவர்கள் அதிகமாக நாடாளுமன்றில் இருப்பதால் தான்.

இவ்வாறானவர்களுக்கு மக்கள் வாக்களிப்பதில்லை என்று தீர்மானம் எடுத்துவிட்டார்கள். இவர்களிடம் பணம் இருக்கின்றது. சேர் என்று யாரும் அழைப்பதில்லை. அதற்காகத்தான் அவர்கள் நாடாளுமன்றம் வருகின்றார்கள்.

ஆனால், நாங்கள் நாடாளுமன்றம் வருவதற்கு முன்பே பொலிஸார் எங்களுக்குச் சலூட் அடித்துவிட்டார்கள். நோயாளிகளை வைத்தியசாலைக்கு அழைத்து வந்து சலூட் அடித்துவிட்டு தான் நோயாளிகளை எங்களிடம் ஒப்படைப்பார்கள்.

இந்தச் சலூட்டுக்கு ஆசைப்பட்டு நான் நாடாளுமன்றம் வரவில்லை. இருந்த நல்ல தொழிலையும் விட்டு விட்டு மக்கள் சேவை செய்வதற்காகவே நாடாளுமன்றம் வந்தேன்.

ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் பிரபலமாகவே உள்ளது. எனக்கு தினமும் புலனாய்வு அறிக்கை கிடைக்கின்றது. அதை வைத்தே இதைச் சொல்கின்றேன். ஜே.வி.பியும் முன்னிலையிலேயே உள்ளது.

நானோ அல்லது சம்பிக்க – குமார வெல்கமவோ எல்லோரும் பிரிந்து நின்றாலும் போராட்டத்தைத் தொடங்கியதும் ஒன்று சேர்வோம். நாங்கள் வெவ்வேறு கருத்துக்கள் உடையவர்கள். சில விடயங்களில் ஒன்றுபடுகின்றோம். சில விடயங்களில் வேறுபடுகின்றோம் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 25 புதன்கிழமை 08.02.2023 கதிர் 344

## கடத்தல் தங்கத்தை நடுக்கடலில் வீசினரா?

### தமிழ்நாட்டில் பரபரப்பு; விசாரணை தீவிரம்

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தங்கத்தைக் கடத்திச் சென்றவர்கள் அதிகாரிகளைக் கண்டதும் தங்கத்தைக் கடலில் தூக்கி வீசினார்களா என்ற விசாரணைகளை தமிழ்நாடு 2

### வடக்கிலிருந்து கிழக்கிற்குச் சென்ற

## பேரணியில் பங்கேற்ற ஏழு பேர் மீது வழக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கிசென்றபேரணியில்பங்கேற்றவர்களுக்கு எதிராக யாழ். பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 7 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றினால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான பேரணியில் 2

## கோட்டாவிடம் 3 மணிநேரம் துருவித் துருவி விசாரணை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சி.ஐ.டி.) மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையில், கடந்த போராட்ட காலத்தில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் கண்டெடுக்கப்பட்ட ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபா பணம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு 2



# இம்முறையாவது தீர்வு காண அனைவரும் ஒத்துழையுங்கள்

### – கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி அழைப்பு

'அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை இம்முறை எப்படியாவது வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதற்கு உங்கள் அனைவரினதும் (எம்.பிக்களின்) ஒத்துழைப்பு அவசியம்.'

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவரது உரையில் இடம்பெற்றிருந்த முக்கிய சில விடயங்கள் வருமாறு:

நானும், இரா.சம்பந்தனும் 1977ஆம் ஆண்டுதான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானோம். நாம் இருவரும் நாடாளுமன்றத்தில் அங்கம் காலப்பகுதிக்குள்ளேயே தேசிய இனப்பிரச்சினைக்கு 2



# 13ஐ தீயிட்டுக் கொழுத்தி பிக்குமார் வெறியாட்டம்

## நாடாளுமன்றத்துக்கு அருகில் பதற்றம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்துக்குப் பிரவேசிக்கு பொல்துவ சந்திக்கு அருகில் பௌத்த பிக்குமார் இன்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, பிக்குமாருக்கும் பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பொல்துவ சந்தியில் இருந்து நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்ல முற்பட்ட பிக்குமாரை பொலிஸார் தடுக்க முற்பட்ட போதே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பௌத்த பிக்குமார் இன்று கோட்டே, பரகும்பா பிரிவெனாவுக்கு அருகில் இந்த எதிர்ப்புப் பேரணியை ஆரம்பித்தனர்.

பேரணியைப் பொலிஸார் தடுத்த போதும், பிக்குமார் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் தியத்த பூங்காவைக் கடந்து பொல்துவ சந்தியை பிக்குமார் அடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குமார் சிலர் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரதியொன்றைத் 2

## ஒற்றையாட்சி - பேய் சமஷ்டி - பிசாசு

### அமைச்சர் டக்ளஸ் வியாக்கியானம்



ஒற்றையாட்சி முறைமையை தமிழ் மக்கள் பேயைப் போன்றும் சமஸ்டி ஆட்சி முறைமையை சிங்கள மக்கள் பிசாசை போன்றும் கருதுவதாலேயே முரண்பாடுகள் எற்படுவதாக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இன்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரை வரவேற்கத்தக்கது. நாட்டில் வாழும் அனைத்து இன 2

## வங்கி அதிகாரிகள் இன்று யாழ். நகரில் கவனவீர்ப்பு

அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள்மற்றும் அதிகாரிகள் இன்று மதியம் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசின் புதிய தனிநபர் வருமான வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




நாடு முழுவதும் இன்று பிற்பகல் 12.30 மணியுடன் வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலை நிறுத்த போராட்டத்தை 2

## இம்முறையாவது.....

நிலையானதொரு தீர்வை கண்டு விடவேண்டும்என்பதேஎம்இருவரினதும் பொது கனவாக இருந்தது. அந்தக் கனவு தொடர்பில் அன்று முதல் இன்றுவரை பேச்சு நடத்துகின்றோம். முயற்சிகளை முன்னெடுக்கின்றோம்.

அரசியல்தீர்வுக்காக இதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இம்முறை எப்படியாவது இதனை வெற்றியை நோக்கி நகர்த்து வதற்கு எதிர்பார்க்கின்றோம். இதற்கு உங்கள் அனைவரினதும் (எம்.பிக்க ளின்) ஒத்துழைப்பு அவசியம்' – என்றார்.

அத்துடன், தேசிய இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டியதன் அவசியத்துவத்தை எடுத் துரைத்த ஜனாதிபதி, காணி விடுவிப்பு குறித்தும் கருத்து வெளியிட்டார்.

## ஒற்றையாட்சி......

மக்களின் அடிப்படை பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி யுள்ளார். முன்வைத்த கொள்கைத் திட் டத்தை முழுமையாகப் பின்பற்றினால் பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர்நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில்சமூகக்கட்டமைப்பில்காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விசேட பொறிமுறைகள் கொள்கைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சியா அல்லது சமஸ்டி யாட்சியா என்பது தற்போதைய பிரச்சி னையல்ல, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதையே தற்போதைய பிரதான இலக்காகக் கருதவேண்டும்.

இரு தரப்பினரும் முரண்பட்டுக் கொண்டால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இணக்கப்பாட்டுடனான பேச்சு ஊடாக தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஒற்றையாட்சிக்குள் அதிகார பகிர்வை சாத்தியமாக்க முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித் துள்ளார்.

## கோட்டாவிடம்......

இன்று தெரிவித்தது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இல்லத்துக்குச் சென்று வாக்குமூலம் பதிவு செய்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## வங்கி அதிகாரிகள் ......

முன்னெடுத்தனர்.

வங்கி ஊழியர்களின் சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த அரை நாள் வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

வரியை கூட்டி வறுத்து எடுக்காதே, அநீதி செய்யாதே அடி வயிற்றில் அடிக்காதே, வரி அறவீடு வளப்படுத்தலே அன்றி வதைப்படுத்தல் அல்ல , வானுயரும் பணவீக்கம் தொழில் வல்லுநர்கள் நடுவீதிக்கு, சீரற்ற வரிக்கொள்கையை சீக்கிரமே மாற்று போன்றவாசங்களடங்கிய பதாகைகளை போராட்டகாரர்கள் தாங்கியிருந்தனர்.

## கடத்தல் ......

பொலிஸார் தொடங்கியுள்ளனர். இதனால் பெரும்பரபரப்புஏற்பட்டுள்ளது.

தங்கத்தை நடுக்கடலில் வீசினார்கள் என்கிற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் பெரும் பரபரப்பும் நிலவுகின்றது.

தமிழ்நாடு, ராமநாதபுரம் மண்டபம் அருகே நடுக்கடலில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் கடத்தப்ப டுவதான இரகசிய தகவலின் அடிப்ப டையில் சுங்க அதிகாரிகள் ஓர் படகை மடக்கியுள்ளனர். இதன்போது கடத் தல்காரர் தங்கத்தை கடலில் வீசியிருக் கலாம் எனக் கருதப்படுகின்றது.

இலங்கையில் இருந்து நாட்டுப்படகில் கடத்திச் சென்ற தங்கக் கட்டிகளே இவ் வாறு கடத்தல்காரர்களால் கடலில் வீசியதான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இருந்து தங்கக் கட்டி களைகடத்திச்சென்றதானகுற்றச்சாட்டில் இருவரை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மண் டபத்தை அடுத்த வேதாளை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந் துள்ளது.

இதேநேரம் கடலில் வீசப்பட்டதாக கருதப்படும் தங்கத்தை கடலில் மூழ்கும் ஸ்கூபா டைவிங் வீரர்களை கொண்டு இந்தியா தேடி வருகின்றதது.

## 13ஐ தீயிட்டுக் ......

தீயிட்டுக் கொளுத்தினர்.

அதன்பின்னர் பிக்குமார் அரசுக்கு ஒரு வாரம் காலக்கெடு வழங்கிப் போராட் டத்தை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டனர்.

ஒரு வாரத்துக்குள் தமக்கு இதற்கான தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் அவர் கள் எச்சரிக்கை விடுத்தனர்.

அவ்வாறு தமக்கு ஒரு வாரத்துக்குள் தீர்வுகிடைக்காவிடின்ஆயிரக்கணக்கான பிக்குமாரை ஒன்றிணைத்து மிகிந்த லையில் இருந்து கொழும்பு நோக்கி மாபெரும் போராட்டத்தை ஆரம்பிக்க வுள்ளதாகவும் பிக்குமார் குறிப்பிட்டனர்.

## வடக்கிலிருந்து ......

பங்கேற்றதாகதெரிவித்துபேரணியில் பங்கேற்ற எழு பேரை பெப்ரவரி 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு

யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்றில் முற்படுமாறு அந்தக் கட்ட ளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் தமிழர்களுக்கான தீர்வுகளை வலி யுறுத்திம் யாழ் பல்கலைக்கழகத்தி லிருந்து மட்டக்களப்பு நோக்கி 4 நாள்கள் பேரணி இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் களான சிவஞானம் சிறீதரன், செல் வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான சரவண பவன், எம்.கே.சிவாஜிலிங்கம், சட்டத் தரணி வி.மணிவண்ணன், வேலன் சுவாமிகள் ஆகிய ஏழு பேருக்கே நீதி மன்றகட்டளை அனுப்பப் பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பிக்குகள் மாறவேயில்லை

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து பிக்குகள் இன்று கொழும்பில் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். காவல்துறையினரின் தடையையும் மீறி அவர்கள் முன்னேறிச் செல்வதற்கான பலப்பரீட்சையிலும் ஈடுபட்டதால் பதற்றம் ஏற்பட்டது. அதுபோக பிரித் ஓதியபடியே 13இன் பிரதி ஒன்றையும் அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தக் குட்டித் தீவில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமான பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படுகின்ற போதெல்லாம் பிக்குகள் அதற்குள் தலையிட்டு அனைத்தையும் கெடுத்திருக்கிறார்கள். பண்டா –செல்வா ஒப்பந்தம் முதல் பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதுவரையும் அதன் பின்னாலும் பிக்குகளின் அரசியல் செல்வாக்கும் நெருக்குதல்களும் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படுவதைத் தொடர்ந்து தடுத்து வருகின்றன.

பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்தின் காவலர்களாகத் தங்களை நிலைநிறுத்திக் கொண்டுள்ள பிக்குகள் இந்தத் தீவினை கடந்த 75 வருடங்களாக நாசமாக்கி வருகின்றார்கள். நாட்டை நாசமாக்கி இன்றைய நெருக்கடி நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் அரசியல்வாதிகளின் வகிபாகத்திற்கு எள்ளளவும் குறைந்ததல்ல பிக்குகளின் வகிபாகமும்.

இத்தனை மனிதப் பேரவலங்களுக்குப் பின்னரும் போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொடுக்கப்பட்டதன் பின்னரும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த பின்னரும் நாட்டை சீனாவிடமும் இந்தியாவிடமும் மொத்தமாக அடைவு வைத்த பின்னரும் இன்னும் தமது மேலாதிக்க சுயஇன்பத்துக்காக நாட்டைக் குட்டிச்சுவராக்கும் முடிவில் பிக்குகள் செயற்படுவது மிகக் கேவலமானது.

கடந்த 75 ஆண்டுகளில், குறிப்பாக கடந்த 10 வருடங்களில் பிக்குகள் எந்த வகையிலும் மாறவில்லை என்பதையே இன்றைய ஆர்ப்பாட்டமும் பிக்குகளின் செயல்களும் எடுத்துக்காட்டுகின்றன. வரலாறு திரும்பவும் நிகழ்கிறது. தமிழர்கள் அகிம்சை ரீதியில் போராடிய போதெல்லாம், பேச்சு மூலம் ஒரு தீர்வை அடைவதற்கு முயன்றபோதெல்லாம் பிக்குகள் தமது பிடிவாதத்தின் மூலம் தொடர்ந்தும் தமிழர்களைக் கடினமான முடிவுகளை நோக்கித் தள்ளிய வரலாற்றைத்தான் மீண்டும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களையும் அவர்களின் அச்சுறுத்தல், அட்டூழியங்களையும் கடந்துசெல்லும் துணிச்சலான முடிவுகளை எடுக்கும் துணிவுள்ள ஒரு அரசியல் தலைவர் பதவிக்கு வரும் வரையில் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வராது. தமிழர்களுக்கும் தீர்வு கிடைக்காது.

# எரிசக்தி முயற்சிகளில் முன்னேற்றம் இந்தியா - இலங்கை மதிப்பாய்வு!



மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இந்திய பெற்றோலிய அமைச்சர் ஹர்தீப் எஸ் பூரியுடன் பேச்சு நடத்தியுள்ளார். பெங்களூரில் திங்கட்கிழமை இந்திய எரிசக்தி வாரத்தை முன்னிட்டு இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது.

இருதரப்பு எரிசக்தி முயற்சிகளில் முன்னேற்றம் தொடர்பாக இரு அமைச்சர்களும் ஆய்வு செய்ததோடு எரிசக்தி கூட்டாண்மைகளை விரிவுபடுத்துவதற்கான வழிகள் தொடர்பாகவும் விவாதித்தனர்.

# அரசாங்கம் தேர்தலைக் கண்டு அச்சும் போது அரசியல் நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வுகாண்பது?

## சரித ஹேரத் கேள்வி

அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது.

அரசாங்கம் தேர்தலை கண்டு அச்சமடையும் போது எவ்வாறு அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடி தீவிரமடைந்து நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தீவிரமடையும் சூழல் காணப்படுவதை பல்வேறு காரணிகள் ஊடாக அவதானிக்க முடிகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், சர்வதேச நாணய நிதியம் மற்றும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஆகிய விடயங்கள் பிரதான பேசு பொருளாகக் காணப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளபோது தேர்தலை பிற்போட பல்வேறு சூழ்ச்சிகளைத் தொடர்ந்தும் அரசு முன்னெடுக்கிறது.



அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. தேர்தல் ஊடாகவே அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

இந்த அரசாங்கம் தேர்தலுக்கு பயந்து ஓடுகின்ற நிலையில் எவ்வாறு அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்ட கருத்துக்கு பல்வேறு தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

13ஆவது திருத்தம் தொடர்பில் வெளி தரப்பினரது கருத்துக்களைக் கோர முன்னர் பிரதமரிடமும், பொது ஜன பெரமுனவிடமும் நிலைப்பாட்டைக் கோர வேண்டும். 1989 ஆம் ஆண்டு இனரீதியான முரண்பாடுகள் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தின. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்து வதாக குறிப்பிட்டுக்கொண்டு தேவையில்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். – என்றார்.

# கடிதங்களை விநியோகம் செய்யும் போது போதைப்பொருளை விற்ற தபால் ஊழியர்!

## பொருளாதார நெருக்கடி காரணமாம்

கடனில் இருந்து விடுபடுவதற்காக கடிதங்களை விநியோகிக்கும் போது போதைப்பொருளையும் விநியோகித்த குற்றச்சாட்டில் தபால் ஊழியர் ஒருவர் 5 ஆயிரத்து 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார் என அங்குலான பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான தபால் ஊழியர் போதைப்பொருள் விநியோகிப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஹெரோயின் போதைப்பொருள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரசாங்க உத்தியோகம் இருந்தும் ஏன் இந்தத் தொழிலை மேற்கொண்டீர்கள் என சந்தேகநபரிடம் வினவியபோது, தனக்கு கிடைக்கும் சம்பளம் வாழ போதுமானதாக இல்லை எனவும், பணம் சம்பாதித்ததாகவும் அவர் வாக்குமூலம் அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வடபகுதி முஸ்லிம்களுக்கு முறையான வகையில் வீடமைப்புத் திட்டங்கள் வழங்கப்படவில்லையாம்!

## பள்ளிவாசல் பிரதிநிதிகள் எடுத்துரைப்பு



வடபகுதி முஸ்லிம்களுக்கு முறையான வகையில் வீடமைப்பு திட்டங்கள் வழங்கப் படவில்லை சர்வமத தலைவர்களிடம் பள்ளி வாசல் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளார்கள்.

ஸம் ஸம் பவுண்டேஷன் மற்றும் தர்ம சக்தி அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்யும் சர்வமத தலைவர்களின் வடக்கு மற்றும் தெற்கு மத நல்லிணக்க உரையாடல் நிகழ்ச்சி திட்டத்தின் ஒருபகுதியாக சர்வமதத் தலைவர்களது வடக் கிற்கான விஜயம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் அமரபுர,ராமாஞ்சியம் பௌத்த பீடங்களைச் சேர்ந்த பௌத்த மத குருக்கள், இந்து மத குருக்கள், இஸ்லாம் மதத் தைச் சேர்ந்த மௌலவிகள், கிறிஸ்தவ அருட் தந்தைகள் என சுமார் 40 பேர் கொண்ட தூதுக் குழுவினர் இந்த விஜயத்தில் கலந்துகொண் டனர். யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள பச்சைபள்ளிவாசலில் இடம்பெற்ற சந்திப்பிலே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது. இதில் கலந்துகொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கையில் –

1990 ஆண்டு முஸ்லிம்களின் வெளியேற் றம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மீளக்குடியமரத் தொடங்கினார்கள். இவ்வாறு மீளக் குடியமர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு முறையான மீள் குடியேற்ற உதவிகள் கிடைக்கவில்லை. நாம் இது தொடர்பாக மீள் குடியேற்ற அமைச்சர் ,நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தி கலந்துரை யாடியிருந்தோம். குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடமும் கலந்துரையாடி மீள் குடியேற் றத்தை இலகுபடுத்துமாறு கோரியிருந்தோம்.

எனினும் எந்த முன்னேற்றமும் இடம் பெறவில்லை. 1990 ஆம் ஆண்டு வெளி யேறியபோது 3 ஆயிரத்து .500 குடும்பங் களாக இருந்தோம் தற்போது 15 ஆயிரம் குடும் பங்களாக விரிவடைந்துள்ளோம். அவ்வாறா யின் எமது மீள் குடியேற்றத்துக்கு என்ன நடந்தது? தற்போது சுமார் ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ள போதும் இதுவரை சுமார் 250 குடும்பங்களுக்கே வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளது. அவ்வாறாயின் முஸ்லிம் மீள்ள்குடியேற்றத்துக்கு என்ன நடந்தது? சுமார் 13 ஆண்டுகளாக இடம்பெற்ற மீள்குடியேற்றத்தில் 250 வீடுகள் வழங்கப்பட்டால் எனையவர்க ளுக்கு எத்தனைகாலம் எடுக்கும் என்பதே எமது கேள்வியாகவுள்ளது எனவே தெற்கில் இருந்து எமது பிரச்சினைகளை ஆராய விஜயம் மேற்கொண்டுள்ள சர்வமத தலைவர்களான நிங்கள் எமக்கு எங்களுடைய வீட்டுத்திட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்கள் இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வழங்கி வைத்தார்கள்.

இந்த சந்திப்பில் யாழ். மாநகர சபை உறுப் பினர் நிலாம், பச்சை பள்ளிவாசல் மௌலவி, பச்சை பள்ளிவாசல் தலைவர் எம்.மூபின், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் ஆர்.கே. சுவர்கான்மற்றும்சமூகசெயல்பாட்டாளர் அம்ஜத்கான், பள்ளிநிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்துவதன் மூலம் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பயணத்தில் ஸம் ஸம் நிறுவனம் மற்றும் தர்மசக்தி அமைப்பும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடியை வரி அதிகரிப்பு தீவிரமாக்கும்!

## நாலக கொடஹேவா எச்சரிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்து ழைப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்காது.

அரசாங்கத்தின் தவறான தீர்மானங் களால் பொருளாதார வளர்ச்சி வீதம் வீழ்ச் சியடைந்துள்ளது. வரி அதிகரிப்பு பொருளா தார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

மொத்த தேசிய வருமானம் 8.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் அறிமுகப்படுத்திய தவறான பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்படுத்துகிறார். பொருளாதார நெருக்கடி சமூகக் கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்.

அரசாங்கத்தின் தவறான வரிக் கொள்கையால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரி வீதம் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொழிற்துறை பாதிக்கப்பட்டுள்ளது.

வரி அதிகரிப்பால் தேசிய வருமானத்தை முழுமை யாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கை முற்றிலும் தவறானது.

நாட்டு மக்களைப் பொருளாதார ரீதியில் முழுமையாக நெருக்கடிக்குள்ளாக்கி பொருளாதார பாதிப்பில் இருந்து மீள முடியாது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏதாவதொரு வழிமுறையில் நிவாரணம் வழங்காமல் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையை மேம்படுத்த முடியாது. பொருளாதாரப் பாதிப்பாலும், அர சாங்கத்தின் புதிய வரி திருத்தங்களாலும் புத்திசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

அறிவார்ந்த தொழிற்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுகின்றமை பொருளாதார பாதிப்பைத் தீவிரப் படுத்துமே தவிர பொருளாதாரத்தை ஒருபோதும் மேம் படுத்தாது. சர்வதேச நாணய நிதியத்தின் 290 கோடி டொலர்களைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது.

வரி அதிகரிப்புக்கு எதிராக நாட்டில் இனி போராட்டங்கள் தீவிரமடையும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

சீனாவின் உத்தரவாதம் போதுமானதல்ல என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதால் கடன் மறுசீரமைப்பு விவகாரம் தொடர்ந்து தாமதமடையும். – என்றார்.

# தேர்தலை நடத்த நிதி இல்லை என்றால் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெறுக!

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஸ் கூறுகிறார்




தேர்தலைநடத் துவதற்கு நிதி இல்லை என்றால் உள்ளூராட்சி மன் றங்களில் இருந்து பெற்றுக் கொள் ளுங்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாக ராஜா நிரோஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே தியாகராஜா நிரோஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில் –

தற்போதைய நிலையில் இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு இலங்கையினுடைய திறை சேரியாக இருக்க லாம் அல்லது நாட்டினுடைய வருமானங்களின் அடிப்படையாக இருக்கலாம் அதற்கான செல வினங்களை ஈடு செய்வதற்கான பணம் போதாது இருப்பதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டி ருக்கின்றன.

தேர்தல் ஆணைக்குழு எடுத்து வரும் முயற் சியை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தத் தேர்தல் ஒத்திவைக்காமல் நடத்தப்பட வேண் டும். கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிக் கொண் டிருக்கின்ற நிலையில் ஒரு மக்கள் ஆணையை மீளவும் பெற வேண்டிய ஒரு சூழல் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இதற்கான பணம் போதாது என்கின்ற காரணம் காட்டப்பட்டு ஒத்து ழைக்கப்படுமானால் நாங்கள் தேர்தல் ஆணை யாளருக்கு ஒரு பகிரங்கமாக விடயத்தை முன்வைக்கின்றோம். இது உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்ற காரணத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட பணத்தைப் பெறலாம். ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்கள் தனியாக வருமானம் ஈட்டும் ஓர் அரச கட்டமைப்பாக இருக்கின்றன, அவ்வாறான சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட அளவு தேர்தலுக் ான செலவீனங்களை அந் தந்த உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெறு வதற்கு உரிய சுற்று நிருபம் ஊடாக முன் னெடுத்தாவது இந்தத் தேர்தலை நடத்த வேண் டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனின் தேர்தல்கள் என்பது கருத்து பெறுவதற்கும் கருத்து தெரிவிப்பதற்குமான சுதந்திரம் என்ற அடிப்படையில் ஜனநாயகத்துக் காக எங்களுடைய செலவீனங்களில் ஒரு குறிப் பிட்ட தொகையை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

அதேநேரம் அதனை எங்களுடைய கௌரவ அவையும் ஏற்றுக்கொள்ளும். எங்களைப் போன்ற ஏனைய சபைகளும் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

அரசாங்கம் நிதியில்லை என்று சொல்லி தேர்தல்களை ஒத்தி வைக்குமானால் நிச்சயமாக இது ஒரு ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற செயல் என்கின்ற அடிப்படையில் சர்வதேசம் சில உதவிகளை இந்த தேர்தல்கள் நடத்துவதற் காகச் செய்ய வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# நுவரெலியா சீதை அம்மன் கோவிலுக்கு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் விஜயம்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நேற்று (செவ்வாய்க்கிழமை) நுவரெலியாவில் உள்ள சீதையம் மன் கோவிலுக்கு விஜயம் செய்தார்.

அங்கு நடைபெற்ற பூஜை வழிபாடுகளிலும் அவர் கலந்துகொண்டு, ஆலயத்தை வலம்வந்தார்.



# விரிவான ஜனநாயககூட்டிணைவை உருவாக்குவது உடனடித் தேவை!

## அனைவருக்கும் நீதி அமைப்பு வலியுறுத்தல்

அனைவரையும் உள்ளடக்கிய, பன்முகத் தன்மைவாய்ந்த, அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்பக்கூடிய சமூக - பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை உடனடியாக மேற்கொள்ளும் அதேவேளை, நாட்டுக்கு அவசியமான ஆழமான ஜனநாயக மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதற்கான தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய விரிவான ஜனநாயகக்கூட்டிணைவை உருவாக்குவதும் இன்றியமையாததாகும் என்று சிவில் சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய 'அனைவருக்கும் நீதி' அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சிவில் சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களான ஏ.எம்.பாயிஸ், பவானி பொன்சேகா, இரா.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜயதேவ உயன்கொட ஆகியோரை உள்ளடக்கிய 'அனைவருக்கும் நீதி' என்ற அமைப்பால் 'மதிப்பீடு மற்றும் மறுசீரமைப்பைப் பிரதிபலிக்கும் சுதந்திரதினம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை அதன் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவாக சுமார் 90 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வறுமைக்குள் வீழ்ந்திருப்பதுடன் 30 சதவீதத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பின்மைக்கும் 56 ஆயிரம் சிறுவர்கள் மந்தபோசணைக் குறைபாட்டுக்கும் முகங்கொடுத்துள்ளனர். இவற்றுடன் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு, அதிகரித்துவரும் பொருள்களின் விலைகள் மற்றும் தொடர்ச்சியான மின்வெட்டு என்பன பின்தங்கிய நிலையிலுள்ள சமூகங்களை வெகுவாகப் பாதித்திருப்பதுடன் இலங்கையில் தீவிரமடைந்துவரும் சமத்துவமின்மையை நன்கு வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கையர்கள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சுமார் 20 கோடி ரூபா செலவில் சுதந்திரதின நிகழ்வுகளை நடத்தியிருக்கின்றது. இந்தச் செலவினங்களை உள்ளூராட்சிமன்றத்தேர்தலை நடத்துவதற்கு போதியளவு நிதி இல்லை என்று கூறுகின்ற அரசாங்கத்தின் கூற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும்.

அதேபோன்று இலங்கை மீண்டும் புதுப்பிக்கப்பட்ட அடக்குமுறையைக் கொண்டுவந்திருக்கின்றது. கடந்த 4 ஆம் திகதி கொழும்பில் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப்போராட்டத்தைக் கலைப்பதற்குப் பொலிஸாரால் வலுவான நடவடிக்கைகள் பிரயோகிக்கப்பட்டதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய உத்திகள் இலங்கைக்குப் புதிதல்ல. வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களும், சிறுபான்மையினத்தவரும், அரசியல் ரீதியான விமர்சகர்களும் பல தசாப்த காலமாக இத்தகைய அடக்குமுறைகளை எதிர்கொண்டுவருகின்றனர். இலங்கையின் ஒடுக்குமுறை வரலாற்றுக்கு மத்தியில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று சில மாத காலத்தில் அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள், போராட்டக்காரர்களை இலக்குவைக்கும் விதத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றின் பயன்பாடு, கொழும்பில் 'உயர் பாதுகாப்பு வலய' உருவாக்கம், மீறல்கள் மற்றும் கண்காணிப்புக்கள் என்பன உள்ளடங்கலாக புதியதொரு பரிமாணத்திலான ஒடுக்குமுறைகளுக்கு இலங்கை முகங்கொடுத்தது. நாட்டில் அரசியல் மறுசீரமைப்பும், கட்டமைப்பு ரீதியான மாற்றமும் அவசியமென பொதுமக்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து வலியுறுத்திவருகின்ற போதிலும் தற்போதைய புதிய ஜனாதிபதியின் கீழும் ஏகாதிபத்தியவாத, இராணுவமயப்படுத்தப்பட்ட ஆட்சிநிர்வாகம் தொடர்கின்றது. இந்தப் போக்கு ஆட்சிநிர்வாகத்தில் நிலவும் நெருக்கடி, தரமான அரசியல் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சி போன்றவற்றை மேலும் தீவிரப்படுத்தும். எனவே மக்களின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கக்கூடியவாறான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் அனைவரையும் உள்ளடக்கிய, பன்முகத்தன்மை வாய்ந்த, அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்பக்கூடிய சமூக - பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை உடனடியாக மேற்கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. அதேபோன்று நாட்டுக்கு அவசியமான ஆழமான ஜனநாயக மறுசீரமைப்புக்களைக் கொண்டுவருவதற்கான தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய விரிவான ஜனநாயகக்கூட்டிணைவை உருவாக்குவதும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கையின் கையிருப்பு வெறும் 200 கோடி டொலர்!

## மத்தியவங்கி அறிவிப்பு

2023 ஜனவரி இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 201 கோடி டொலர் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2022 டிசெம்பரில் இருந்து உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துப் புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீத அதிகரிப்பு என மத்திய வங்கி கூறியுள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு 2022 டிசெம்பரில் 180 கோடி டொலரில் இருந்து 2023 ஜனவரியில் 200 கோடி டொலராக உயர்ந்துள்ளது.

# ஒலுவில் துறைமுகத்தில் ரின்மீன் தொழிற்சாலை!

உள்ளூர் ரின்மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



அம்பாறை ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தில் அமைந்துள்ள ரின்மீன் உற்பத்தித் தொழிற்சாலையை தனியார் முதலீட்டாளர் ஊடாக புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்து உற்பத்தியை அதிகரிக்கவும், இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் எடுக்கப்பட்ட தொடர் முயற்சியின் பெறுபேறாக நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தனியார் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்குமிடையே இந்த ஒப்பந்தம் அமைச்சில் கைச்சாத்தானமை குறிப்பிடத்தக்கது.



# முறை சார்ந்த மீளாய்வு மூலம் அரச செலவினங்கள் சீரமைப்பு!

அரச செலவினங்களை சீரமைக்கும் நோக்கில் பூஜ்ஜிய நிலை அடிப்படையிலான வரவு - செலவுத் திட்ட முறையை அறிமுகப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியால் 2023 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்ட யோசனையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பூஜ்ஜிய நிலை அடிப்படையிலான வரவு - செலவுத் திட்ட முறையின் கீழ் முறை சார்ந்த மீளாய்வு மூலம் செலவிடும் வேலைத்திட்டங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறல், வீண்விரயம், குறைந்த முன்னுரிமைகளுடன் கூடிய செயற்பாடுகள் மற்றும் தற்போது நிலவுகின்ற நிதி ஒதுக்கீட்டுப் பயன்பாட்டுக்கான வினைத்திறனானதும் உற்பத்தித்திறன் மிக்கதுமான முறைமைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

அதற்கமைய, வருடாந்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் அதிகநிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் 10 அமைச்சுக்கள் தொடர்பான முறை சார்ந்த மீளாய்வை மேற்கொள்வதற்காக பிரதி திறைசேரி செயலாளர் அல்லது திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரியின் தலைமையில் 10 அதிகாரிகள் குழுக்களை நியமிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, பெருந்தோட்டத்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றுக்காக குறித்த அதிகாரிகள் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

# நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.க. பரப்புரை ஆரம்பம்

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்துக்கான தேர்தல் பிரசாரத்தையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலும், தேர்தல் பிரசார ஆரம்பக்கூட்டமும் கொட்டகலை சீ.எல்.எப் மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், எம்.பியுமான மருதபாண்டி ராமேஸ்வரன், சிரேஷ்ட உறுப்பினர் அனுசியா சிவராஜா, தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், இ.தொ.காவின் உப தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என கட்சி செயற்பாட்டாளர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி சபைகளில் 7 சபைகளில் யானை சின்னத்திலும், 5 சபைகளுக்கு சேவல் சின்னத்திலும் காங்கிரஸ் போட்டியிடுகின்றது.





# 8 ஆயிரத்தை நெருங்கியது நிலநடுக்க உயிரிழப்புக்கள்

## துருக்கி, சிரியாவில் தொடர்கிறது அவலம்

துருக்கியில் நிகழ்ந்த நிலநடுக்கத்தால் அந்நாட்டிலும், அதன் அண்டை நாடான சிரியாவிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7,900-ஐ கடந்துள்ளது.

துருக்கியின் காஜியன்டப் நகரை மையமாக கொண்டு திங்கள்கிழமை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அலகில் 7.8 புள்ளியாகக் பதிவானது. இந்த பூகம்பத்தால் துருக்கியின் 10 மாகாணங்கள் மற்றும் அண்டை நாடான சிரியாவின் வடக்கு பகுதியில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. பெரிய நடுக்கத்தைத் தொடர்ந்து துருக்கி, சிரியாவில் அடுத்தடுத்து 312 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அலகில் 4 முதல் 7.5 வரை பதிவாகியுள்ளது.

துருக்கியில் இதுவரை 5 ஆயிரத்து 894 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 34 ஆயிரத்து 800க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். துருக்கி இராணுவம், பொலிஸ், தீயணைப்பு படை என 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாடுகளை சேர்ந்த 4 ஆயிரம் பேரும் மீட்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

சிரியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. சிரிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஓரளவுக்கு மீட்பு பணிகள் நடைபெறுகின்றன. ஆனால் கிளர்ச்சிப் படைகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் பேரழிவில் இருந்து மீள முடியாமல் தவித்து வருகின்றன. சிரியாவில் இதுவரை 2 ஆயிரத்து 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரி கேத்தரின் கூறும்போது, "துருக்கி, சிரியாவில் அறிவிக்கப்பட்டிருக்கும் உயிரிழப்பு எண்ணிக்கையைவிட 8 மடங்கு அதிக பாதிப்பு இருக்கும் என்று கருதுகிறோம்" என்றார்.

துருக்கியில் 5,894 பேர், சிரியாவில் 2,032 பேர் என இதுவரை 7 ஆயிரத்து 926 பேர் உயிரிழந்துள்ளனர். இரு நாடுகளிலும் ஒவ்வொரு நிமிடமும் ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. அடுத்த சில நாட்களில் உயிரிழப்பு 20 ஆயிரத்தைதாண்டும் என்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வ தொண்டு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள 10 தென்மாகாணங்களில் மூன்று மாதங்களுக்கு அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவினை அதிபர் தயீப்எர்டோகன் பிறப்பித்தார். முன்னதாக, நிலநடுக்கத்தை அடுத்து 7 நாட்களுக்கு தேசிய துக்கதினம் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கிறது.

# சிரியாவில் இடிபாடுகளுக்கு அடியில் பிறந்த பெண் குழந்தை மீட்கப்பட்டது



சிரியாவில் உள்ள ஜின்டெரிஸ் பகுதி நிலநடுக்கத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அங்கு மீட்புப் பணிகளின்போது இடிபாடுகளுக்கு அடியில் பிறந்த பெண் குழந்தை காயங்களுடன் திங்கள்கிழமை பிற்பகல் கண்டெடுக்கப்பட்டது. குழந்தையின் முதுகில் பெரிய காயம் ஏற்பட்டுள்ளது.

அந்தக் குழந்தையின் தொப்புள்கொடி, அதன் தாயான அஃப்ரா அபு ஹாதியாவுடன் இணைந்திருந்தது. தாய் உயிரிழந்துவிட்ட நிலையில், அந்தப் பகுதியில் வசித்த பெண், தொப்புள் கொடியை அறுத்தர்.

அந்தக் குழந்தை உடனடியாக அருகில் உள்ள அஃப்ரின் பகுதி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், அதன் உடல்நிலை சீராக உள்ளது. கண்டெடுக்கப்படுவதற்கு சுமார் 3 மணி நேரத்துக்கு முன்பாக குழந்தை பிறந்திருக்கலாம் என்று மருத்துவர் தெரிவித்துள்ளார். குழந்தையின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்று தெரிகிறது.

# துருக்கியில் வீட்டு வாடகை 5.5 லட்சம் ரூபாயாக எகிறியது

## மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் அவதி

நிலநடுக்கத்தால் துருக்கியில் பல்லாயிரக் கணக்கான வீடுகள், தொடர் மாடிகள் நொருங்கித் தரைமட்டமாகிவிட்டதால் அங்கு வீட்டு வாடகை தாறுமாறாக எகிறிவிட்டது. நிலநடுக்கத்துக்கு முன்னர் 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் ரூபாவாக இருந்த வாடகை தற்போது ஐந்தரை லட்சம் ரூபாயாக எகிறி நிற்கின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிரியாவின் அசாஸ் நகரில் நடுக்கத்தால் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. அந்த நகரில் பெரும்பாலான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. கட்டட இடிபாடுகளில் இருந்து நேற்று 7 வயது சிறுமி உயிருடன் மீட்கப்பட்டார். சிறுமியின் தாய், தந்தை, உறவினர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டனர். என் அம்மா எங்கே என்று சிறுமி தேம்பி தேம்பி அழுது கொண்டே இருக்கிறாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் மீட்புப்படை வீரர்கள் தவித்து வருகின்றனர்.

சிரியாவை சேர்ந்த அரசு அதிகாரி ஒருவர் கூறும்போது, உள்நாட்டுப் போரால் சிரியா மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சூழலில் இயற்கை பேரிடரும் எங்களை தாக்கியிருக்கிறது. நிலநடுக்கம் பாதித்த பல கிராமங்களுக்கு எங்களால் செல்ல முடியவில்லை. அந்த கிராமங்களின் நிலைமை என்ன என்பது தெரியவில்லை' என்று தெரிவித்தார்.

துருக்கியின் அஜ்மரின் நகரை சேர்ந்த பர்ஹாத் கூறும்போது, "கடந்த திங்கள்கிழமை அதிகாலை 4 மணிக்கு வீட்டின் ஜன்னல் கண்ணாடி உடைந்த சப்தம் கேட்டு எழுந்தேன். யாரோ வெளியில் இருந்து கல் வீசியிருக்கிறார் என்றே முதலில் கருதினேன். ஆனால் வீட்டின் தரை பயங்கரமாக அதிர்ந்தது. வெளியே ஓடிவந்து பார்த்தபோது ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி இருந்தன. நான், மனைவி, பிள்ளைகளுடன் வெளியே ஓடி தப்பித்தேன். வயதான எனது தாய், தந்தை வெளியே ஓடி வருவதற்குள் வீடு இடிந்து உயிரிழந்துவிட்டனர்" என்று தெரிவித்தார்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கியை சேர்ந்த ஒரு பெண் கூறியதாவது: பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்துள்ளன. சாலை, தெருக்களில் அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களில் மக்கள் தங்கியுள்ளனர். இரவில் கடும் குளிர் நிலவுகிறது. சில நேரங்களில் மழை பெய்கிறது. அனைத்து துன்பங்களையும் சகித்து வாழ்கிறோம்.

கடந்த மாதம் நான் தங்கியிருந்த வீட்டுக்கு 4,500 லிரா (ரூ.87,000) வாடகை அளித்தேன். அந்த வீடு நிலநடுக்கத்தால் இடிந்துவிட்டது. அதிர்ஷ்டவசமாக நானும் எனது குடும்பமும் உயிர்தப்பிவிட்டோம்.

இப்போது புதிதாக வாடகைக்கு வீடு தேடி அலைகிறோம். ஆனால் வீட்டின் மாத வாடகையாக 30,000 லிரா (ரூ.5.81 லட்சம்) கேட்கின்றனர். இப்போதைய நிலையில் இந்த வாடகையை கொடுக்க முடியாது. எனவே தொடர்ந்து நிவாரண முகாமில் தங்கியிருக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு அந்த பெண் தெரிவித்தார்.

துருக்கியின் சான்லியூர்பா நகரில் செய்தி சேகரிக்கும் 'ஸ்கை நியூஸ்' தொலைக்காட்சி சேனலின் செய்தியாளர்கள் கூறியதாவது: துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவு, குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் கடைகள், சூப்பர் மார்க்கெட்டுகள் சூறையாடப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் உடல்கள் பெரிய பள்ளங்கள் தோண்டப்பட்டு ஒட்டுமொத்தமாக அடக்கம் செய்யப்படுகின்றன. நிவாரண முகாம்களில் அடிப்படை வசதிகள் இல்லாததால், ஏராளமானோர் கார், வாகனங்களில் தங்கியுள்ளனர்.

# நியூயார்க் தாக்குதல் பாதிப்பிலிருந்து "மீண்டு வருவது சிரமமாக இருந்தது"

## எழுத்தாளர் சல்மான் ருஷ்டி பகிர்வு

"நியூயார்க் நிகழ்வில் என் மீது நடத்தப்பட்ட தாக்குதல், என்னை மனரீதியாகவும் பாதித்தது" என்று பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி தெரிவித்துள்ளார்.

பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி கடந்த ஒகஸ்டு மாதம், அமெரிக் காவின் நியூயார்க் நகரில் ஓர் இலக்கிய நிகழ்வில் பேசிக்கொண்டு இருக் கும்போது தாக்குதலுக்கு உள்ளானார். இந்தத் தாக்குதலில் சல்மான் ருஷ்டி ஒரு கண் பார் வையை இழந்தார். இந்த நிலையில், 5 மாதங்களுக்குப் பிறகு பிரபல பத்திரிகை நிறுவனத்துக்கு சல்மான் ருஷ்டி நேர்காணல் அளித்துள்ளார்.

அதில் அவர் பகிர்ந்து கொண்டதாவது:

"அந்தத் தாக்குதல் என்னை மனரீதியாக பாதித்தது. நான் மீண்டும் எழுதுவது மிகவும் கடினமாக இருந்தது. நான் எழுத உட்காருவேன், ஆனால் எதுவுமே நடக்காது. நான் எழுதுவேன், ஆனால் அவை எல்லாம் வெறுமையாக இருந்தன. அடுத்த நாள் அவற்றைக் குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட்டுவிடுவேன். உண்மையில் அந்த சம்பவத்திலிருந்து நான் வெளியேவரவில்லை.

உண்மையில் பெரிய காயங்கள் எல்லாம் விரைவில் குணமாகிவிடும். அதுபோலவே பெரிய காயங்கள் சரியான நிலையில், என் கையில் ஏற்பட்ட சிறிய காயங்கள் இதுவரை சரியாகவில்லை. அதற்கு, சிகிச்சை எடுத்து வருகிறேன். ஆனால, நான் நன்றாக இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், புகைப்படம் ஒன்றையும் சல்மான் ருஷ்டி தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்திருக்கிறார்.



இந்தியாவின் மும்பை நகரில் பிறந்தவர் அகமது சல்மான் ருஷ்டி. பின்னாளில் அவரது குடும்பம் பிரிட்டனுக்கு புலம் பெயர்ந்தது. 'மிட்நைட்ஸ் சில்ட்ரன்' படைப்புக்காக புக்கர் பரிசை வென்றவர். 1988இல் வெளிவந்த இவரது 'தி சாட்டனிக் வெர்சஸ்' படைப்பு, உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

உலகம் முழுவதுமே இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடுகளில் இந்தப் புத்தகம் இன்றளவும் தடை செய்யப்பட்டுள்ளது. இதில், ஈரான் சல்மான் ரூஷ்டி தலைக்கு விலையும் நிர்ணயித்தது. இதன் காரணமாக சல்மான் ருஷ்டி தலைமறைவாக வாழ்ந்து வந்தார். இந்த நிலையில், கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நியூயார்க்கில் நடந்த நிகழ்வு ஒன்றில் சல்மான் ருஷ்டி கொடூரமாக தாக்கப்பட்டார். இதில் சல்மானின் கை நரம்பு, கழுத்து, நெஞ்சு, கல்லீரல் ஆகிய உறுப்புகளில் காயம் ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலில் சல்மானின் ஒரு கண் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்ட ஹாதி மட்டர் (24) என்ற இளைஞர் கைது செய்யப்பட்டார். சல்மான் ருஷ்டி மீதான இந்தத் தாக்குதலை எழுத்தாளர்கள் பலரும் கண்டித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆஸி. அணி தலைவர் ஃபிஞ்ச் தனது ஓய்வை அறிவித்தார்



ஆஸ்திரேலிய துடுப்பபாட்டக்காரரும், கிரிக்கெட் அணித் தலைவருமான ஆரோன் ஃபிஞ்ச் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக செவ்வாய்க்கிழமை அறிவித்தர்.

ஆஸ்திரேலியாவின் பிக் பாஷ் லீக் போட்டியில் தொடர்ந்து விளையாட இருக்கும் அவர், இதர நாடுகளில் நடைபெறும் ரி20 லீக் போட்டிகளில் களம் காணத் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

ரி20 கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலியாவின் வெற்றிகரமான துடுப்பாளர் மற்றும் அணித் தலைவராக இருக்கும் ஃபிஞ்ச் தலைமையில், கடந்த 2021இல் அந்தநாட்டு அணி தனது முதல் ரி20 உலகக் கோப்பையை வென்றது.

ஆனால், கடந்த ஆண்டு சொந்த மண்ணிலேயே நடைபெற்ற ரி20 உலகக் கோப்பை போட்டியில் அவரது அணி அரையிறுதிக்கு முன்னேறத் தவறிய நிலையில், இந்த ஓய்வு முடிவு எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தது. ஃபிஞ்ச் ஏற்கெனவே சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டிலி ருந்து கடந்த ஆண்டு ஓய்வை அறிவித்திருந் தார்.

வெள்ளைப் பந்து தொடர்களுக் கான ஆஸ்திரேலிய அணியின்நீண்டகாலஅணித் தலைவர், ரி20 ஆஸ்திரேலிய அணிக் கான நீண்டகால தலைவர் ஆகிய பெருமைகளைக்கொண்டுள்ள ஃபிஞ்ச், ஆஸ்திரேலி யாவுக்காக 5 டெஸ்ட், 146 ஒரு நாள், 103 ரி20 ஆட்டங்களில் விளையாடியிருக்கிறர். அவற்றில், டெஸ்ட்டில் 278 ஓட்டங்களும், ஒருநாள்கிரிக்கெட்டில்5,406 ஓட்டங்களும், ரி20இல் 3,120 ஓட்டங்களும் சேர்த்திருக்கிறார். ஒரு நாள் கிரிக்கெட்டில் 17 சதங்களும், ரி20இல் 2 சதங்களும் விளாசியிருக்கிறார் அவர். ஆஸ்திரேலியாவை 76 ரி20, 55 ஒரு நாள் ஆட்டங்களில் அணித் தலைவர் வழி நடத்தி உலக சாதனை புரிந்திருக்கும் ஃபிஞ்ச், ரி20 கிரிக்கெட்டில் 76 பந்துகளில் 172 ஓட்டங்கள் விளாசி (2018/ஜிம்பாப்வே) அதிக ஓட்டங்களுக் கான உலக சாதனையும் படைத்திருக்கிறார்.

# ஐரோப்பிய லீக்; பார்சிலோனா அணி பலம் காட்டுகிறது



ஐரோப்பிய கண்டத்தில் நடைபெறும் கால்பந்து லீக்குகளில் ஒன்றான ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா 3-0 என்ற கோல் கணக்கில் செவில்லாவை தோற்கடித்தது தனது பலத்தை மீண்டும் நிரூபித்தது.

அந்தப் போட்டியில் நடப்பு சீசனின் 2ஆவது பகுதி ஆட்டங்கள் தொடங்கியிருக்கும் நிலையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் தற்போது பார்சிலோனா 53 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது. சற்று தடுமாற்றம் கண்டுள்ள ரியல் மாட்ரிட்டுக்கும் பார்சிலோனாவுக்கும் இடையே 8 புள்ளிகள் வித்தியாசம் உள்ளன. ரியல் சோசிடட் 39 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் இருக்கிறது.

இந்தப் பருவத்தில் இத்தனை புள்ளிகள் வித்தியாசத்தில் வேறெந்த அணியும் முன்னிலை வகித்ததில்லை. 2018-19 சீசனுக்குப் பிறகு லீக் போட்டிகளில் கோப்பை ஏதும் வெல்லாத பார்சிலோனா, தற்போது அதற்கான முனைப்புடன் முன்னேறி வருகிறது. மொத்தம் 38 ஆட்டங்கள் நடைபெறும் லீக் கட்டத்தில் தற்போது 20 ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன.


செவில்லாவுக்கு எதிரான இந்த வெற்றி, லா லிகாவில் பார்சிலோனா பதிவு செய்துள்ள 5ஆவது தொடர் வெற்றியாகும். அதுவே, இதர போட்டிகளையும் கணக்கில் கொண்டால் இது அந்த அணிக்கு 10ஆவது தொடார் வெற்றி.

செவில்லாவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் பார்சிலோனாவுக்காக ஜோர்டி அல்பா (58'), காவி (70'), ரஃபினா (79') ஆகியோர்கோலடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் 0-1 என்ற கோல் கணக்கில், 10ஆம் இடத்திலிருக்கும் மல்லோர்காவிடம் தோல்வி கண்டது. அந்த அணி வீரார் மார்கோ அசென்சியோ ஒரு பெனால்ட்டி கிக் வாய்ப்பில் கோலடிக்கத் தவற, சக வீரார் நாச்சோ தவறுதலாக அடித்த 'ஓன் சைட் கோல்' (13') மல்லோர் கா வெற்றிக்கு வழி வகுத்தது. கரீம் பென்ஸிமா உள்ளிட்ட அந்த அணியின் பல முக்கிய வீரார்கள் காயம் காரணமாக ஓய்வில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் இரு ஆட்டங்களில் வல்லாடோலிட் - ரியல் சோசிடட்டையும், கிரோனா - வாலென்சியாவையும் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றன.

# இங்கிலாந்து பிரீமியர் லீக்




இங்கிலாந்தில் நடைபெறும் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் சிட்டி 0-1 என்ற கோல் கணக்கில் டாட்டன்ஹாமிடம் தோல்வி கண்டது. இந்த ஆட்டத்தில் டாட்டன்ஹாமுக்காக ஹேரி கேன் 15-ஆவது நிமிஷத்தில் கோலடித்தார்.

இத்துடன் 21 ஆட்டங்களில் 4ஆவது தோல்வியைச் சந்தித்த மான்செஸ்டர், 45 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், 22 ஆட்டங்களில் 12ஆவது வெற்றி யைப் பதிவு செய்த டாட்டன்ஹாம் 39 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன. மற்றொரு ஆட்டத்தில் நாட்டிங்ஹாம் ஃபாரஸ்ட் 1-0 என்ற கணக்கில் லீட்ஸ் யுனைடெட்டை வென்றது. அந்த அணிக்காக பிரென்னன் ஜான்சன் 14 ஆவது நிமிஷத்தில் ஸ்கோர் செய் தார். நாட்டிங்ஹாம் அணி 21 ஆட்டங்களில் பெற்ற 6ஆவது வெற்றியுடன் 13ஆவது இடத்திலும், லீட்ஸ் அணி 20 ஆட்டங்களில் 6-ஆவது தோல்வியுடன் 17ஆவது இடத்திலும் இருக்கின்றன.

# லீக் 1 கால்பந்து





பிரான்ஸின் லீக் 1 கால்பந்து போட்டியில் 2-ஆம் இடத்திலிருக்கும் மார்சிலே அணி 1-3 என்ற கோல் கணக்கில் 8-ஆம் இடத்திலிருக்கும் நைஸ் அணியிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டது.

நைஸுக்காக சோஃபியேன் டியோப் (38'), கெடான் லபோர்ட் (44'), பிலால் பிராஹிமி (85') ஆகியோர்கோல டிக்க, மார்சிலே தரப்பில் ரஸ்லான் மலினோவ்ஸ்கியி (60') ஸ்கோர் செய்தார்.

மற்றொரு ஆட்டத்தில் அஜாசியோவை 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற நான்டெஸ், 25 புள்ளிகளுடன் 13ஆவது இடத்திலிருக்க, அஜாசியோ 18 புள்ளிகளுடன் 18ஆவது இடத்தில் இருக்கிறது. ஸ்ட்ராஸ்பர்க் 2-0 என்ற கோல் கணக்கில் மான்ட்பெல்லியரை வீழ்த்தியது. பிரெஸ்ட் - லென்ஸ் அணிகள் ஆட்டம் 1-1 என்ற கணக்கிலும், லாரியன்ட் - ஆங்கர்ஸ் மோதல் கோலின்றியும் டிராவில் முடிந்தன.

# விகாரைக்கு அருகிலுள்ள மதுச்சாலையை மூட வற்புறுத்தி பிக்குகள், மக்கள் ஆர்ப்பாட்டம்



கம்பளை, தொலுவ பிரதான வீதியில் தலதா மாளிகையின் புராதன சின்னங்கள் பாதுகாக்கப் பட்ட வணக்கஸ்தலத்துக்கு அருகில் மதுபான சாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனை உடனடியாக அகற்றக்கோரி யும் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

14 விகாரைகளின் விகாராதிபதிகளும் 8 கிராமங்களைச்சேர்ந்த பொதுமக்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புராதன காலத்தில் கண்டிக்கு வெளிநாட்டு படையெடுப்பின்போது அங்கிருந்த புனித சின்னங் கள் பாதுகாக்கப்பட்டதாக கூறப்படும் கம்பளை தொலுவ பிரதான வீதியில் உள்ள மெகொட கலுக முவயில் அமைந்துள்ள விகா ரைக்கு 50 மீற்றர் தூரத்திலேயே புதிய மதுபானசாலை கடந்த 2ஆம் திகதி திடீரென திறக்கப்பட்டது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

“மதுபானசாலை குறித்து நடவடிக்கை எடுக் குமாறு தொலுவ பிரதேச செயலாளர், பிரதேச அரசியல்வாதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனை வருக்கும் அறிவித்துள்ளோம். அவர்கள் எங்களது கோரிக்கைக்கு செவிசாய்க்கவில் லையெனில், எதிர்வரும் 15ஆம் திகதி பிரதேச வாசிகளுடன் கனேகொட ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் விசேட பூசைகளை நடத்தி சம்பந் தப்பட்ட தரப்பினருக்கு தண் டனை கொடுக்கு மாறு பிரார்த்தனை செய்யப் போகின் றோம் என்றார் அங்கு கருத்து தெரிவித்த உடபளாத்த பிரதி சங்கநாயக தேரர்.

**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
♦ Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
♦ Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
♦ Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
♦ Java, C++ Programming
**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5
**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)
**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
♦ குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
♦ அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
♦ மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ பாடத்திட்டத்தை தழுவியது
Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**

# ஓட்டோ விபத்தில் 9 மாத குழந்தை

## பரிதாபச் சாவு

ஓட்டோ விபத்தில் 9 மாத ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் குருநாகலில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பன்தும்பலாவ பகுதியில் இருந்து பமுனுகெதர நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதியும், நான்கு பய ணிகளும் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டனர். அவர்களில் 9 மாத ஆண் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

# யாழ். மாநகரசபை உறுப்பினர் ரெமீடியஸ் விபத்தில் படுகாயம்

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் இன்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் சட்டத்தரணியும் மாநகர சபை உறுப்பினருமான மு.றெமீடியஸ் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சிறுப்பிட்டிப் பகுதியில் பருத்தித்துறை வீதியில் மோட் டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது குறுக்கே சென்ற நாய் ஒன்றால் விபத்து இடம்பெற்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த சமயம் அவரது தலைக் கவசம் கழன்று அகன்றமையால் தலையில் பலத்த அடிபட்ட தாகவும் சாட்சிகள் தெரிவித்தனர்.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த சிலர் சட்டத்தரணி விபத்தில் சிக்கியதைப் பார்த்து, அந்த வழியே வந்த நோயாளர் காவு வண்டியை நிறுத்தி அதில் அவரை ஏற்றி போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் றெமீடியஸுக்க உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. .